Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 28 (01.02.2003) சனிக்கிழமை இதழ் : 123

### விண்ணாணம் விநாசியர்



இப்ப கனபேற்ற றிப்போட்டிங் பொயின்ற் டெல்கியாப் போச்சுது...!

# எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த இந்தியாவிற்கு திடீர் விஜயம்!

## இந்திய அரசின் அழைப்பில் இரகசியமாகச் சென்றார்

(புதுடெல்கி)

**அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்ற எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, நேற்று திடீரென இந்தியாவிற்கு இரகசியப் பயணமொன்றை மேற்கொண்டு புதுடெல்கி புறப்பட்டுச் சென்றார். இந்திய அரசாங்கத்தின் விசேட அழைப்பின்பேரிலேயே அவர் பயணமானதாகத் தெரியவருகிறது.**

இது பற்றி மேலும் தெரியவருவதாவது - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்று அரசியல் வட்டாரங்களில் யாரும் அறியாவண்ணம் இரகசியப் பயணமொன்றை மேற்கொண்டு இந்தியா பயணமானார்.

புதுடெல்கியில் அவர் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி மற்றும் சிரேஷ்ட தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ - இந்திய அரசின் பாதுகாப்பு ஆலோசகர்களையும் சந்திக்கவிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## திருட்டுக்குச் சென்ற இரு படையினர் மக்களால் சுற்றிவளைத்துப் பிடிப்பு!

### வடமராட்சி கிழக்கு நடுக்குடத்தனையில் நேற்று சம்பவம்

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள நடுக்குடத்தனைப் பகுதியில், திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இரு இராணுவத்தினர் நேற்றிரவு மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து இந்தப் பகுதியில் நடைபெற்று வந்த திருட்டுச் சம்பவங்களால் மக்கள் விழிப்படைந்ததை அடுத்து இந்த இரு இராணுவத்தினரும் நேற்றிரவு மடக்கப்பட்டனர்.

நேற்றிரவு 9.30 மணிக்கு நடுக்குடத்தனையிலுள்ள வீடொன்றினுள் ஆயுதங்களுடன் சென்ற இரு இராணுவத்தினரையும் மக்கள் சுற்றிவளைத்துப் பிடித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக அப்பகுதி (10ஆம் பக்கம் பார்க்க)

## பாரிய புனரமைப்புப் பணிகளை இனி சிறானே மேற்கொள்ளும்!

### புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கூறுகின்றார்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அமைச்சினூடாக இந்த ஆண்டு யாழ்.மாவட்டத்திற்கு 70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளது என, நேற்று யாழ். அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற - புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சு யாழ்.மாவட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் குறித்த கலந்துரையாடலின்போது, புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை 2 மணியளவில் யாழ்.அரச அதிபர் பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயரட்ணம் - அமைச்சின் திட்டங்கள் குறித்து மேலும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நம்பியார் இறுதி அறிக்கையுடன் இன்று கொழும்பு வருகின்றார்!

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக அரசாங்கம் ஆலோசனை கேட்டிருந்த இந்தியாவின் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியார் இன்று கொழும்பு வருவார் எனத் தெரியவருகிறது.

முதற்கட்ட அறிக்கையினை கடந்த டிசெம்பரில் அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருந்த இவர் - தனது இறுதிக்கட்ட அறிக்கையினைக் கொடுப்பதற்காக இன்று கொழும்பு வருவதாகப் புதுடெல்கியிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

# போரால் பாதிக்கப்பட்ட சிறாருக்கு தொழினுட்ப கல்விக்கு உதவுங்கள்!

### யுனிசெப் நிறுவனப் பணிப்பாளரிடம் புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் புதிய தொழில்நுட்பக் கலலூரி ஒன்றை நிறுவுவதற்கு யுனிசெப் நிறுவனத்தின் உதவி கோரி செயற்திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ளனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும், அரசின் பொருளாதாரத் தடைகாரணமாக இதுவரை வறுமையில் வாடிய சிறுவர்களுக்கும் கல்வியும் தொழில் பயிற்சியும் வழங்குவதற்காக இத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற யுனிசெப் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருடனான சந்திப்பொன்றில் மேற்படி திட்டம் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டது. (10ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியிலுள்ள வெண்புறா செயற்கைக்கால் பொருத்தும் நிறுவனத்திற்கு நேற்று விஜயம் செய்தார் பெலாமி.

## சர்வதேச இணக்கத்துக்கமைய செயற்படுவதில் புலிகள் உறுதி!

### சிறார் ஆட்சேர்ப்பு குற்றச்சாட்டு பற்றி யுனிசெப் பணிப்பாளர்

விடுதலைப் புலிகள் போர் நடவடிக்கைகளில் சிறார்களை ஈடுபடுத்துவது தொடர்பாக வெளியான தகவல்கள் எதுவும் ஆதாரங்களுடன் எமக்குக் கிடைக்கவில்லை. நீண்டகாலம் தொடர்ந்த போர் சிறார்கள் இணைவதற்குக் காரணம் இருந்திருக்கலாம்.

ஆனால், இனிமேல் அவ்வாறு எதுவும் நடக்காது என்றே நான் நம்புகிறேன் என யுனிசெப் பணிப்பாளர் கரோல் பெலாமி தெரிவித்தார்.

இலங்கைக்கான விஜயத்தில் கொழும்பில் தங்கியிருந்தபோது

(10ஆம் பக்கம் பார்க்க)

## எமது சிறுவர்களைப் போர் பாதித்ததை மறைக்கவே தெற்கில் விஷமப் பிரசாரம்!

### யுனிசெப் பணிப்பாளரிடம் தமிழ்ச்செல்வன் விளக்கம்

(கிளிநொச்சி)

யுனிசெப் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல் பெலாமியுடனான பேச்சுக்கள் யாவும் முன்னேற்றகரமாகவும், திருப்திகரமாகவும் அமைந்தது என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், சந்திப்பின் பின்னர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முக்கியமாக சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவது, சிறுவர்களை படைக்குச் சேர்ப்பது சம்பந்தமாகத் தகவல்கள் திரிபுபடுத்தப்பட்ட தவறான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வரும் இந் நிலையில், (10ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128

# போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுதலைப் புலிகளின் கைப்பொம்மை

## என்கிறார் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி

(கொழும்பு)

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதானப் பேச்சுக்களின் முடிவில், இலங்கை பாதுகாப்பான நாடாக இருக்கப் போவதில்லை என முன்னாள் பிரதமரும் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்திருக்கிறார்.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் புலிகளின் பலம் அதிகரித்திருக்கிறது. ஆயுத பலமும் அதிகரித்துள்ளது.

புலிகளின் கடற்புலிகள் அமைப்பைக் கலைக்குமாறு அரசாங்கம் பேச்சுக்களில் நிர்ப்பந்திக்க வேண்டும். சமாதானப் பேச்சுக்களில் மத்தியஸ்தராகப் பணியாற்றும் நோர்வேயின் நடுநிலைமை சந்தேகத்தையளிக்கிறது.

நோர்வே ஒருதலைப்பட்சமாகவே செயற்படுகின்றது. எதிர்பார்க்கப்பட்டது போல அது நேர்மையாகச் செயற்படவில்லை.

அத்துடன், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் கூட புலிகளின் கைப்பொம்மையாக இருக்கிறது. எனவே, புவியியல் ரீதியாக இலங்கையின் நண்பனான இந்தியாவின் கவனத்தைத் திருப்பி, பேச்சுக்களில் முக்கிய பங்கு வகிக்க அழைக்கப்பட வேண்டும் என ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்தார்.

## மருத்துவ பீடத்துக்கு தெரிவான 9 மாணவர்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு மேலும் ஒன்பது மாணவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரதாப், எஸ்.சிவரூபன், சி.அரவிந்தன், பி.கேதாரணி, வி.நந்தினி, எஸ்.கலைச்செல்வி, எம்.சாமினி, எம்.வாசுதேவன் மற்றும் என்.கரிகாலன் ஆகியோரே புதிதாக அனுமதிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களுக்கான மருத்துவபீட விரிவுரைகள் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகிவிட்டதால், உடனடியாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் கோரியுள்ளார்.

## பிணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் புதல்வர்கள் சானக, ரோஹான் ஆகியோர் மீதான பிணை மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இவர்களுக்கான பிணை மறுக்கப்பட்டது.

அத்துடன், வழக்கு விசாரணைகள் 5 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (01)

## இன்றைய நாள் இனிய நாள்

01-02-2003 - சனிக்கிழமை

அமாவாசை விரதம்

| | |
|---|---|
| மேடம் | :- தொழில் ஸ்திரம், காரிய வெற்றி, திரவிய லாபம், குடும்ப சுகம். |
| இடபம் | :- மனக்கவலை, பயம், தேகசுகம், தனலாபம், நிலைமாற்றம. |
| மிதுனம் | :- தேகசுகக் குறைவு, பெண்களால் நன்மை, பிரயாணம், சிநேகிதர் உதவி. |
| கர்க்கடகம் | :- காரியசித்தி, சிறைப் பயம், புத்திக்கேடு, பொருட்சேதம். |
| சிங்கம் | :- வீண் செலவு, வாகன யோகம், மனக்கிலேசம், தானதருமம். |
| கன்னி | :- விவாகாதி நன்மைகள், சந்தோஷம், பிரயாணத்தால் நன்மை. |

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- இராசபயம், தனவரவு, லட்சுமிகரம், அதிகபிரயாசம். |
| விருச்சிகம் | :- திரவியலாபம், களஸ்திரசுகம், புத்திரரால் கவலை, செலவு. |
| தனு | :- நோய், மனக்கவலை, நண்பர் உதவி, பொருட்சேதம் |
| மகரம் | :- தேகசுகம், மகிழ்ச்சி, பெரியோர் ஆசி, புத்திரரால் நன்மை. |
| கும்பம் | :- தனநாசம், சத்துருபீடை, தேகசுகக்குறைவு, தீமை. |
| மீனம் | :- தனலாபம், காரியவெற்றி, நல்லவாழ்வு, தேகசுகம். |


யாழ்.பல்கலைக்கழக
கத்தோலிக்க மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக



யாழ்.நியூ வீணாகானத்தின்
பல்லிய நிகழ்வு
(கீழைத்தேய, மேலைத்தேய வாத்தியங்களின் சங்கமத்தில் ஒலிக்கும் புதுமையான படைப்பு)
யாழ். பல்கலைக்கழக இளைய தலைமுறைப் பாடகர்களுடன்
யாழ்.புகழ்' 'ரிதம்ஸ்' இசைக் குழு
இணைந்து வழங்கும்
ரீங்கார மழை

இடம் : கைலாசபதி கலையரங்கம் (யாழ்.பல்கலைக்கழகம்)
நாள்: 02.02.2003
நேரம் : பி.ப. 2.00 மணி



அனைவரையும் கலந்து சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.
கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலைக்கழகம்.
ஊடக அனுசரணை: நமது ஈழநாடு



அழைப்பிதழ்
நாடி இதழ் 07
மலர் வெளியீட்டு விழாவும்
மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் இணையத்தள அறிமுக நிகழ்வும்.
காலம் : இன்று (01.02.2003) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி.
இடம் : கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
மருத்துவ மாணவர் ஒன்றியம், மருத்துவபீடம், யாழ்.பல்கலைக் கழகம்.
(சி-222)



பிறந்தநாள் வாழ்த்து
கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறையில் வசிக்கும் எனது நண்பியான
செல்வி ஆறுமுகம் வதனா
இன்று (01.02.2003) 24 ஆவது அகவையில் அடியெடுத்து வைக்கிறாா். அவரை சகல சௌபாக்கியங்களும் பெற்று பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றேன்.
அன்பின் நண்பி
தி.மேரிவதனி.
(சி-543)



வாசகர்களே, வாடிக்கையாளர்களே!
நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்வதற்கு உங்களுக்கு அருகிலேயே இனி எமது விளம்பர முகவர்.

நமது ஈழநாடு விளம்பர முகவர்
சித்தன்கேணியில்
விநாயகர் தொலைத்தொடர்பு நிலையம்
பிரதான வீதி, சித்தன்கேணி.



தொலைபேசி இல.
070-212428
070-212757





சிறு விளம்பரம்

தேவை

எமது தொழிலகத்துக்கு வேலை பழகிய, பழக விரும்புகிற துடிப்புள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. வியாழக்கிழமைக்கு முன்பு (06.02.2003) நேரில் வரவும்.

ஸ்ரீ மாருதிஸ்ரார் இனிப்புத் தொழிலகம், சுரோஸ் இண்டஸ்ரீஸ், 6/12, விதானையார் வீதி, சுண்டுக்குளி.
(224) (சி-547)



THE ROYAL COLLEGE OF JAFFNA
SPOKEN ENGLISH WITH GRAMMAR
N.VIGNESWARAN ARCHERY
BLACK ROAD, CHANKANAI.
426 (302), K.K.S. ROAD, JAFFNA
(சி-546)



ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலுமம ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா



10.30, 2.30, 6.00, 9.30 (சி-545)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.



நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
எம்.ஜி.ஆர்., ராஜசலூஜா நடித்த
இதயக்கனி
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
TOMB RAIDER
(சி-544)



YOGI BEAUTY PARLOUR
நடாத்தும்
அழகுக்கலை செயல்முறை பயிற்சி வகுப்புகள்
1 நாள் மட்டும்
இந்தியாவிலிருந்து வருகை தரவிருக்கும் பிரபல அழகுக்கலை நிபுணரான
திருமதி மலர் விஸ்வநாதன்
MA, PGDM,DAB Th,
Dip in herbal beauty therapy (Mumbai),
Dip in trichology (Delhi),
Principal of Malar Beauty Parlour (Tamil nadu),
Institute of Beauty Culture
(Regd. Government of Tamil nadu).
யாழ்நகரில் பல வருட அனுபவமிக்க அழகுக்கலை நிபுணரான
திருமதி யோகினி சண்முகநாதன
Dip in Cosmetology, Beauty Therapy,
Hair Dressing & Home Science.
(India & Col. Srilanka)
இவர்களால் நடத்தப்படும்.
இடம்: 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
காலம்:02.02.2003.
நேரம்: காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகும்.
Gold Glow Facial
Platinum Perl Facial } Supersonic
Hair Rebonding
Hair Colouring
-224)
High Frequency Hair Treatment (பொடுகு, முடி உதிர்தல்)
தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கம்: 222 - 2796

# யாழ். விமான சேவைக் கட்டணம் நிறுவனங்களுக்கிடையில் போட்டி

## அதிகரிப்பு செய்ய முடியாத நிலையாம்

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான விமான சேவைகளை நடத்தி வருகின்ற மூன்று நிறுவனங்களுக்கிடையில் நிலவிவரும் போட்டி காரணமாக - கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள முடியாதநிலை தோன்றியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

குடாநாட்டுக்கான விமானசேவைகளை நடத்தும் நிறுவனங்கள் 6,000 முதல் 7,000 ரூபாவை இருவழிக்கட்டணமாக அறவிட வேண்டியநிலையில் இருக்கின்ற போதும், தற்போது 4,500 ரூபா மட்டுமே அறிவிடப்படுகின்றது.

அதிகளவிலான பயணிகள், விமானங்களில் பயணம் செய்கின்ற போதும் தமக்கு நட்டம் ஏற்படுவதாக விமானசேவை நிறுவனங்கள் கூறுகின்றன. இதற்காக, சேவையில் ஈடுபடும் எக்ஸ்போ, லயன்எயர், செரன்டிப் ஆகிய நிறுவனங்களுக்கு இடையில் கட்டணங்களை நிர்ணயிப்பது தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இந்தப்பேச்சில் செரன்டிப் நிறுவனம் மட்டும் கட்டண அதிகரிப்புக்கு இணங்கவில்லை. செரன்டிப் நிறுவனத் தலைவர் ரணில் வல்தர இதுபற்றிக் கூறும்போது,

சாதாரண மக்களுக்கும் ஏற்ற வகையில்தான் கட்டணங்களை நாம் நிர்ணயித்துள்ளோம். கட்டணங்களை அதிகரித்து எமது விமான சேவையை வீழ்ச்சிக்குட்படுத்த விரும்பவில்லை.

தற்போது நாட்டில் சுதந்திரச் சந்தை நிலவுகிறது. இலங்கை ஓர் ஏழை நாடு. இங்கு உள்ளூர் விமான சேவைகளை கட்டம் கட்டமாகவே விருத்தி செய்யலாம் எனத் தெரிவித்திருக்கிறார்.

இவ்விடயம் குறித்துச் சிவில் விமான போக்குவரத்து இயக்குநர் கருத்துத் தெரிவித்தபோது, இந்தப் பிரச்சினையில் தாம் தலையிட விரும்பவில்லை என்றும் கட்டணத்தை நிர்ணயிக்கும் விடயத்தில் நிறுவனங்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மூன்று விமான சேவை நிறுவனங்களும் நட்டத்தில் இயங்குவதால் விமானங்களுக்கான சேவைக் கட்டணங்களைக் குறைக்குமாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளன.

## பிரதேச செயலக மட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு, தெற்குப் பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான இவ்வாண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதனடிப்படையில் வலி.தெற்குப் பரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கிடையிலான போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமையும், வலி. வடக்குப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் ஆரம்பமாகின்றன.

குறித்த போட்டிகள் சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைய நடைபெறுமெனவும், போட்டியாளர் குறித்த பிரதேச செயலர் பிரிவில் வசிக்க வேண்டுமெனவும் வலி. வடக்கு - தெற்குப் பிரதேச செயலகங்களின் விளையாட்டு அலுவலர் முகுந்தன் தெரிவித்தார். (68)

## கருத்தரங்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளையின் கருத்தரங்கு, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் தெல்லிப்பளை காசிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள பணிமனையில் இடம் பெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கருத்துரை வழங்கவுள்ளார்.

## ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல்

1992 ஆம் ஆண்டில் போட்டிப் பரீட்சை மூலம் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற விஞ்ஞான, கணித, ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று மதியம் 12.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளது.

## தூதுவராக முன்னாள் அழகுராணி ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தி

(கொழும்பு)

மலேசியாவுக்கான தூதுவராக இலங்கையின் முன்னாள் அழகுராணி ரோஸி சேனநாயக்க நியமிக்கப்பட்டது குறித்து ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தி தெரிவித்திருக்கிறார்.



இவரை அரசாங்கம் நியமனம் செய்யுமாறு சிபார்சு செய்ததையடுத்து ஜனாதிபதி சந்திரிகா, தயக்கத்துடன் அவருக்கான நியமனத்தை வழங்கினார்.

இதையடுத்து வெளிவிவகார அமைச்சுக்கு ஜனாதிபதி சந்திரிகா எழுதியுள்ள கடிதத்தில், இனிவரும் காலங்களில் இத்தகைய நியமனங்களை வழங்கவேண்டாம் என்றும், இத்தகைய நியமனங்கள் ராஜதந்திர சேவையிலுள்ள தொழிற்தரத்தைக் குறைத்துவிடும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

## சரியான தருணம் ஏற்பட்டதும் ரணில் ஆட்சி கலைக்கப்படும்

### அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

ஆட்சி அமைப்பதற்குச் சரியான தருணம் ஏற்பட்டதும் ஜனாதிபதி சந்திரிகா - ஐ.தே.க அரசாங்கத்தை கலைப்பார் என்று அநுரா பண்டாரநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் எதுவும் செய்யமுடியாது. நாளை காலையில்கூட அவரைப் பதவியில் இருந்து ஜனாதிபதியால் நீக்கமுடியும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியை வலுப்படுத்தி ஆட்சியமைக்கச் சரியான தருணம் ஏற்படடதும், தற்போதுள்ள ஐக்கிய தேசிய முன்னணயின் ஆட்சியை ஜனாதிபதி கலைத்துவிடுவார் எனவும் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

## நம்பமுடியாத உயர்வட்டி வீதங்களால் பொதுமக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள்

### நிதி நிறுவனங்கள் குறித்து மத்தியவங்கி அறிவுறுத்து

பிரமுக வங்கியின் வீழ்ச்சியை அடுத்து, மத்திய வங்கியின் அனுமதி பெறாத நிதிநிறுவனங்கள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

தற்போது இலங்கையில் 27 நிதி நிறுவனங்கள் அனுமதியின்றிச் செயற்படுவது இனங்காணப்பட்டிருக்கிறது எனவும் மத்தியவங்கி தெரிவிக்கிறது.

பிரமுக வங்கி போன்ற இன்னொரு நிதி நிறுவனத்தின் வீழ்ச்சியை அனுமதிக்கமுடியாது. எனவே, இத்தகைய நிறுவனங்களில் மக்கள் ஏமாறுவதைத் தடுக்க, விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ளப்படும்.

இலங்கையில் 26 பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களும், 23 அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளும், 13 அனுமதி பெற்ற விசேட வங்கிகளும் இயங்கி வருகின்றன.

இவற்றுக்கு நடைமுறைக் கணக்குகளைப் பேண அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. நம்பமுடியாத உயர்ந்தவட்டி வீதங்களால் கவரப்படடே மக்கள் இத்தகைய நிறுவனங்களால் ஏமாற்றப்படுகிறார்கள் எனத் தெரிவித்துள்ள மத்திய வங்கி, ஊடகங்கள், விளம்பரங்களை ஏற்கும் போது எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறும் கேட்டுள்ளது.

## சிஹல உறுமயவின் வானொலி லண்டன் கிளை நிதியுதவியில்

(கொழும்பு)

சிஹல உறுமயவின் பிரசாரச் செயற்பாடுகளுக்காக வானொலி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு லண்டனில் உள்ள சிஹல உறுமயவின் கிளை, நிதியுதவி வழங்க முன் வந்துள்ளது.

சிஹல உறுமயவின் நிலைப்பாடுகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தவே தாம் வானொலி நிலையத்தை அமைக்கப்போவதாக சிஹல உறுமய அறிவித்துள்ளது. இது தொடர்பாகச் சிஹல உறுமய, தொலைதொடர்பு ஆணைக்குழுவுக்கு விண்ணப்பம் செய்துள்ளது.

புலிகளுக்கு வானொலி நிலையம் அமைக்க அனுமதி வழங்கியது போலவே, தமக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும் எனச் சிஹல உறுமய மேலும் கேட்டுள்ளது.

## மத்திய கிழக்கு நாடுகளில் பணிப் பெண்கள் மீதான துன்புறுத்தல் அதிகரிப்பு



லெபனானில் பாதிக்கப்பட்ட பெண்கள்.

லெபனானில் பணியாற்றும் இலங்கைப் பணிப் பெண்கள் உடல், உள ரீதியாகத் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

கடந்த வாரத்தில் மட்டும் இரண்டு பணிப் பெண்கள் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்தனர். இவர்களில் ஒரு பெண் மீது, அவரை வேலைக்கு அமர்த்தியவர்கள் சுடுநீரை ஊற்றியுள்ளனர். இந்தச் சம்பவங்களுக்கு எதிராகச் சட்ட நடடிவக்கை எடுக்குமாறு லெபனானினுள்ள இலங்கைத் தூதரகத்தை அரசாங்கம் பணித்துள்ளது.




வவுணதீவில் நேற்றுமுன்தினம் அரச - புலிகள் தரப்பு பிரதிநிதிகளுக்கிடையிலான பேச்சுக்களில் கலந்துகொள்ளவரும் ஒஸ்ரின் பெர்ணான்டோ மற்றும் இராணுவ அதிகாரிகளை முதலாவது படத்திலும், பேச்சுக்களில் புலிகள் தரப்பில் கலந்துகொண்ட தளபதி ரமேஸ், வாமன், கேணல் கருணா, வரதன் ஆகியோரை இரண்டாவது படத்திலும், அரசதரப்பில் கலந்துகொண்ட மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா, ஒஸ்ரின் பெர்ணான்டோ பொலிஸ் அதிகாரி மஜீத் ஆகியோரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## நிவாரணத்துக்கு அனுப்பிய அரிசி மாயம்

# ஒப்பந்தம் செய்த நிறுவனத்திடம் விளக்கம் கோருகிறது அமைச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட நிவாரண விநியோகத்திற்கான அரிசியில் கணிசமான பகுதி மாயமாக மறைந்தது தொடர்பாக, விநியோக ஒப்பந்தத்தைச் செய்த வர்த்தகக் கம்பனியிடம் புனர்வாழ்வு அமைச்சு விளக்கம் கோரியுள்ளது.

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நிவாரண அரிசியை விநியோகிப்பதற்காக "லங்கா ட்ரேடேர்ஸ், அசோசியேஷன்" என்ற வர்த்தக நிறுவனத்துடன் புனர்வாழ்வு அமைச்சு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தது.

இந்த ஒப்பந்தத்தின்படி, முதல் கட்டமாக இரண்டாயிரம் மெற்றிக் தொன் அரிசி அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், இவ்வாறு அனுப்பப்பட்ட முதல் கட்ட அரிசியில் 514 மெற்றிக்தொன் அரிசி குறைவாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே புனர்வாழ்வு அமைச்சு மேற்படி வர்த்த நிறுவனத்திடம் இவ்விடயம் தொடர்பாக விளக்கம் கோரியுள்ளது. (க,ச)

## வடக்கு - தெற்கு நட்புறவுத் திட்டம் 21 மாணவர்கள் தென்பகுதி சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

வடக்கு - தெற்கு மாகாணங்களை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், குடாநாட்டிலுள்ள 21 பாடசாலை மாணவர்கள் இன்று தென் பகுதிக்குச் செல்லவுள்ளனர்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

வடக்கு - தெற்கு மாணவர்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் முதற்கட்டமாகத் தென்னிலங்கையிலிருந்து 21 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் குடாநாட்டுக்கு வந்திருந்தனர்.

இவர்கள் குடாநாட்டு மாணவர்களுடன் இணைந்து கல்விச் சுற்றுலா, விளையாட்டு மற்றும் கலாசார நிகழச்சிகளில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக வடக்கிலுள்ள 21 பாடசாலை மாணவர்கள் தெற்கிலுள்ள 21 பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுடன் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்று யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் 5 ஆம் திகதி திரும்புவர். (ச)

### நாடகப் பயிலக புதிய பிரிவு ஆரம்ப வைபவம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்படும் நாடகப் பயிலகத்தின் 2003 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவின் ஆரம்ப வைபவம் நாளை 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாடகப்பயிலகத்திற்குப் புதிதாக விண்ணப்பித்த அனைத்து மாணவர்களையும் மற்றும் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடகப்பயிலகத்திற்குப் புதிதாக விண்ணப்பித்த மாணவர்களுடனான நேர்முகக் கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்குத் திருமறைக் கலாமன்றத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 6 - ச.ஆ.கோபாலமூர்த்தி.

2) விழித்திரை சேதமடைதல் (**DIABETIC RETINOPATHY**) ஏற்பட்டுப் பார்வையிழப்பு ஏற்படலாம்.
3) கண்ணினுள் இரத்தம் கசியலாம் (**VITROUS HAEMORRAGE**).
4) குருதியில் கொலஸ்ட்ரோல் அதிகரித்து அதனால் பல உபாதைகள் ஏற்படலாம்.
5) மூளைக்கு இரத்த விநியோகம் தடைப்பட்டுப் பாரிசவாதம் ஏற்படலாம்.
6) சிறுநீரகங்கள் பாதிக்கப்படலாம்.
7) நோய் எதிர்ப்புச் சக்தி குறையலாம். இதன் காரணமாகக் கசம், நியூமோனியா போன்ற நோய்கள் ஏற்படலாம்.
8) புண்கள் ஏற்படும்போது அவ்விடத்தில் சிதைந்துள்ள இரத்தக் குழாய்களிலிருந்து அதிக குளுக்கோசைக் கொண்டுள்ள குருதி கசிவதால், புண்களில் பற்றீரியாக்கள் பெருக்கமடையும். இரத்தக் குழாய் கள் பாதிக்கப்படுவதால், புண் இருக்கும் இடத்தில் சிதைந்திருக்கும் இழையங்களைப் புனரமைப்பதற்குத் தேவையான போஷணைப் பொருட் களும், நுண்ணுயிர் கொல்லிகளும் புண்ணை அடையமுடியாதிருக்கும். இதனால் புண் மாறாது, தொல்லை தரலாம்.
9) கங்கறீன் (**GANGRENE**) ஏற்பட்டு அங்கங்களை அகற்ற வேண்டிய நிலை தோன்றலாம்.
10) கர்ப்பினிகளுக்குக் கருச்சிதைவு ஏற்படலாம்.
11) பெண்களுக்கு யோனியினுள்ளும் ஆண்களுக்கு ஆண் உறுப்பின் குடைப் பகுதியிலும் பங்கசுக்கள் வளர்ந்து எரிவு, நமைச்சல், நோவு போன்ற உபாதைகளைக் கொடுக்கலாம்.
12) அதிக அப்பியாசம், அதிக மருந்து பயன்படுத்தல், உணவுப் பற்றாக்குறை போன்றவற்றால் குருதியில் குளுக்கோஸின் அளவு குறைந்து மீளா மயக்கநிலையோ, மரணமோ ஏற்படலாம்.

### மீளாமயக்க நிலை (COMA)

பலர், மீளா மயக்கநிலை பற்றிய அறிவின்மையால், மீளா மயக்கத்திற்கு முன்னர் ஏற்படும் குளுக்கோஸ் குறைநிலையில் (**HYPOGLYCEMIA**) காணப்படும் குணங்குறிகளை இதயநோய், அதிக இரத்த அழுத்த நோய் போன்ற நோய்களின் வெளிப்பாடு எனத் தவறாக எண்ணி, வாடகைக்கார், ஓட்டோ போன்றவற்றைத் தேடியும், தொலைவிலுள்ள வைத்தியசாலைக்கு நோயாளியை எடுத்துச்செல்வதில் நேரத்தைச் செலவிட்டும் நோயாளி மீளாமயக்கநிலையை அடைய வைத்துவிடுகிறார்கள். ஆதலால், மீளாமயக்கநிலை பற்றி அனைவரும் விபரமாக அறிந்திருத்தல் அவசியமாகும்.

ஒரு மனிதன் சூழலை உணரும் நிலையில் அல்லது உயிர்ப்புடன் இருக்கிறான் எனக் கூறுவது, அவன் விழிப்பு நிலையில் (**CONCIOUS STATE**) இருப்பதைக் குறிக்கும். *நாளை தொடரும்...*

# மரமுந்திரிகைத் தோட்ட மறைவில் மண் ஆக்கிரமிக்கப்பட்ட வரலாறு!

*(நேற்றைய தொடர்ச்சி)*

இப்பரந்த பகுதியைப் பராமரிக்கவென 7 தொகுதிகளாக இப்பிரதேசம் பிரிக்கப்பட்டது. அங்கு தொழிலாளர்களுக்கெனக் குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

**ஏழு தொகுதிகளும் வருமாறு:-**

***01. குவேனி தொகுதி 15 வீடுகள்.***
***02. விஜய தொகுதி 25 வீடுகள்.***
***03. அபய தொகுதி 40 வீடுகள்.***
***04. தம்பப்பன்னி தொகுதி 28 வீடுகள்.***
***05. மகாசேன தொகுதி 27 வீடுகள்.***
***06. விக்கிரம தொகுதி 35 வீடுகள்.***
***07. பராக்கிரம தொகுதி 45 வீடுகள்.***

தமிழ்ப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட இப்பண்ணைத் தொகுதியில் எந்தவொரு தொகுதியும் தமிழ்ப் பெயரினைக் கொண்டிருக்கவில்லை. இங்கு அமைக்கப்பட்ட தொகுதிகளுக்கு அனுசரணையாகக கூட்டுறவு மொத்தவிற்பனை நிலையம், 6 நீர்த்தாங்கிகள், பண்ணை ஆய்வு கூடம், கராஜ், நிர்வாகப் பணிமனைக் கட்டடம் என்பனவும் அமைக்கப்பட்டிருந்தன. ஆரம்பத்தில் 300 தொழிலாளர்களில் ஆக 15 பேர் மட்டும் தமிழர்களாகக் காணப்பட்டனர். நிர்வாகிகளில் ஒருவர் தவிர ஏனையோர் சிங்களவர்களாகவே காணபபட்டனர்.

மேலும், இங்கு பௌத்த விகாரை ஒன்றும், பாடசாலை ஒன்றும் இயங்கின. பாடசாலையின் பெயர் தம்பப்பனனி சிங்கள வித்தியாலயம் ஆகும். 1990 இல் 50 மாணவர்களும், 3 ஆசிரியர்களும் இங்கு காணப்பட்டனர்.

இந்த குடியேற்றம், பண்ணையிலிருந்து அநுராதபுரம் நகர்வரை கிரவல் வீதியால் இணைக்கப்பட்டிருந்தது. அனுராதபுரத்துடன் இவ் வீதியூடாகவே பயிர்செய் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் தொடர்பாடல்கள் இடம்பெற்று வந்தன.

1983 இல ஏற்பட்ட இனக்கலவர்த்தைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்திலிருந்த சிங்கள மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்த போதிலும், கொண்டச்சியில் அமைந்த குடியிருப்பு, இராணுவத்தின் பாதுகாப்புடன் இயங்கி வந்தது. சூழவர முட்கம்பி வேலிகளால் அடைக்கப்பட்டிருந்தது டன், குடியிருப்பின் நடுவில் பாரிய இராணுவ முகாம் ஒன்றும், நுழை வாயிலில் இராணுவக் காவலரண்களும் காணப்பட்டன.

மேலதிகமாக இக்குடியிருப்புக்கு அண்மித்து சிலாவத்துறை இராணுவ முகாமும் அமைந்திருந்தது. 1990 களில் விடுதலைப் புலிகளால் கொண்டச்சி மற்றும் சிலாவத்துறை முகாம்கள் தகர்க்கப்பட்டதுடன் இந்தக் குடியிருப்பில் இருந்தவர்கள் வெளியேறிவிட்டனர். பண்ணையின் தொழிற்பாடும் செயலிழந்துபோனது.

1983 இன் பின்னர் - இப்பண்ணையில் விதை பொறுக்குதல் மட்டுமே நடைபெற்றது. இத்துடன் தொடர்புடைய பதப்படுத்தல் செயற்பாடுகள் கொழும்பில் நடைபெற்று வந்தன. 1990 இல் 300 தொழிலாளர்களில் ஆக 45 தொழிலாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வந்தனர். இக்காலப் பகுதியில் பிரச்சினைகள் தீவிரமடைந்திருந்த போதிலும், 1987 இல் 216 மெற்றிக்தொன் முந்திரிகைப் பருப்பும், 1988 இல் 87 மெற்றிக் தொன்னும், 1989 இல் 150 மெற்றிக் தொன்னும் இப்பண்ணை மூலம் உற்பத்தி செய்யப்பட்டன. அவ்வாண்டில் 30 லட்சம் ரூபா தேறிய இலாபமாகக் கிடைத்ததாக அங்கு பெறப்பட்ட தரவுகளில் இருந்து அறியக்கூடியதாகவிருந்தது.

மரமுந்திரிகையின் மூலம் பழம், பழத்திலிருந்து கஜுஜாம், கஜு வினாகிரி, கஜுபாணி, அற்ககோல் என்பன உபபொருட்களாக உற்பத்தி செய்யப்பட்டன. "செல்வந்தர்களின் உணவு" எனப்படும் முந்திரிகைப் பருப்பு, பிரதான ஏற்றுமதிப் பொருளாகவுள்ளது. உள்நாட்டிலும் இதற்கு நல்ல கிராக்கியுண்டு. இவ்வுற்பத்தி தவிர முந்திரிகைத் தண்டிலிருந்து பிசின் எடுக்கப்படுகிறது. மரங்கள் விறகுத் தேவையையும் பூர்த்தி செய்கின்றன. 1990 மதிப்பீட்டின்படி ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மரங்கள் இங்கு பரம்பிக் காணப்பட்டன. ஒரு மரம் சராசரியாக 40 வருடங்கள் வரையிலும் பயன் கொடுக்கக் கூடியது. ஒரு மரத்திலிருந்து வருடம் ஒன்றுக்கு 6 - 10 கிலோகிராம் பருப்பும் பெறமுடியும்.

கொண்டச்சியிலுள்ள 'தம்பப்பன்னி' அல்லது 'கஜுவத்தை' எனப் படுகின்ற குடியேற்றமானது பண்ணைவிருத்தி என்ற போர்வையில் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு சிங்களக் குடியேற்றமாகவே அமைந்திருந்தது. நேரடியாகச் சென்று இப்பண்ணையினை பார்வையிட்ட போது (1990), முற்றிலும் சிங்களமயமான ஒரு பகுதியாகவே இது இருந்தது.

அனுராதபுர எல்லையிலிருந்து 22 கிலோ மீற்றர் தொலைவிலேயே இக்குடியிருப்பு உள்ளமையும், இப்பண்ணையூடாக வீதி ஒன்று அனுராதபுரத்துடன் இணைக்கப்பட்டிருந்ததையும், இராணுவ முகாம் அமைக்கப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டமையும் இது ஒரு மோசடியான ஒரு வேலைத்திட்டமாகவே கருத முடியும். இந்தப் பண்ணை விஸ்தரிப்புக் காலப் பகுதியில் (1974 - 1977), மன்னார் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் ஒரு முஸ்லிம் என்பதும், இவர் யு.என்.பி. (UNP) கட்சியைச் சேர்ந்தவர் என்பதும், இடைத் தேர்தலின்போது தெரிவுசெய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது போன்றே மடு றோட் பகுதியிலும் மடு சரணாலயப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த முந்திரிகைப் பண்ணை வவுனியா தென் மேற்கு எல்லையினைச் சார்ந்துள்ள ஒரு பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது. 1980களில் மடு றோட் முற்றிலும் சிங்களக் குடியிருப்பாகவே மாறியிருந்தது. பௌத்த விகாரை ஒன்றும், சிங்கள மகாவித்தியாலயம் ஒன்றும் இங்கு காணப்பட்டன. இதைத் தவிர, மீனவக் குடியிருப்பு என்ற வகையில் தலைமன்னார் - பியர் என்ற இடத்திலும், சவுத்பார், சிலாவத்துறை ஆகிய இடங்களிலும் பருவகால மீன்பிடித்தொழில் செய்து வந்த தென்பகுதி மீனவர்கள், நிரந்தரமாகவே இப்பகுதிகளில் தங்கி வாழும் நிலையும் தோற்றம் பெற்றது. இவ்வாறான விவசாய அபிவிருத்தி, மீன்பிடி இடப்பெயர்வு - என்ற ரீதியில் மன்னார்ப் பிரதேசத்திலும் சிங்கள மக்களினது வீதாசாரம் அதிகரிக்கத் தொடங்கியது. 1921 இல் 97.5 சதவீதமாகக் காணப்பட்ட தமிழர்களின் விகிதாசாரம், 1981 இல் 90.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்தமை இங்கு நோக்கத்தக்கது.

பொதுவாகச் சிங்கள மக்களின் குடியிருப்புக்கள் - இம்மாவட்டத்தின் தென் எல்லையிலும், தென் கிழக்கு எல்லையிலும், சிங்கள மாவட்ட எல்லைகளை அண்டியுள்ள பகுதிகளிலும் இடம்பெற்றது என்பது இங்கு அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகவுள்ளது. இராணுவத்தினரின் உதவியுடன் கரையோரப் பிரதேசங்களில் சவுத்பார், தலைமன்னார் பியர் - "சிலாவத்துறை" போன்ற சிங்கள மீன்பிடிக் குடியிருப்புக்களும் ஸ்திரப்படுத்தப்பட்டுவந்தன.

1983 ஐத் தொடர்ந்து ஏற்பட்ட விடுதலைப் போராட்டம் காரணமாக, இத்தகைய ஆக்கிரமிப்புக் குடியிருப்புக்கள் யாவும் நிலைகுலைந்துபோயின. குறிப்பாக விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் - மன்னார்ப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் - சிங்கள குடியேற்றங்களிலிருந்து தப்பிப் பிழைக்க வழிசெய்துள்ளது என்பது விறைப்பான உண்மையாகும். இல்லையெனில் இப்பிரதேசத்தின் சிங்களவர் விகிதாசாரம் - பல மடங்கு அதிகரித்திருப்பதுடன், பல நிலப்பகுதிகள ஆக்கிரமிப்பிற்கும் உள்ளாகியிருக்கும்.

**இன்றைய நிலை:**

இன்றைய சூழலில் - மன்னார் மாவட்டத்தில் இயங்கிவந்த 3 சிங்களப் பாடசாலைகளும் மூடப்பட்டதுடன், சிங்கள மக்கள் அனைவரும் முற்றாக வெளியேறிய நிலையிலேயே காணப்படுகின்றனர். இன்று மன்னார் - மதவாச்சி வீதி, மன்னார்-வவுனியா பிரதான வீதி இருமருங்கிலும் இராணுவ முகாம்களும், பொலிஸ நிலையங்களும், இராணுவத் தொடர் வேலிகளுமே உள்ளன. மக்கள் குடியிருப்புக்கள் எவையும் வீதியோரங்களில் இல்லை. பறையனாலங்குளம், மடுறோட், கட்டையடம்பன், இசைமாலைத்தாழ்வு, வண்ணாமோட்டை, உயிலங்குளம், நொச்சிக்குளம், சிறுநாவற்குளம் போன்ற குடியிருப்புக்கள் முற்றாக அழிந்து, ஒரு சில வீடுகளே எஞ்சியுள்ள நிலையில் காணப்படுகின்றது.

இன்று மடுறோட் பகுதியில் பரந்த காட்டுப் பகுதி துப்புரவு செய்யப்பட்டு, பௌத்த விகாரையும் புதுப்பிக்கப்பட்டு முடிந்துள்ளது. இப்பகுதியானது புகழ் பெற்ற புனித தலமான மடுமாதா ஆலயச் சூழல் என்பதும் குறிப்பிடத்தக்கது. இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் கொண்டச்சியிலும், மடுறோட்டிலும் மீண்டும் திரும்பி வந்து குடியேறுவார்களா? அல்லது கொண்டு வந்து குடியேற்றப்பட்டு, வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறும் கதையாகத்தான் முடியுமா? என்பது இனிப் போகப் போகத்தான் தெரியும்.

**கலாநிதி.ஏ.எஸ்.சூசை ஆனந்தன்**
*விரிவுரையாளர்,*
*புவியியற்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

# வார்த்தை விளையாட்டு - 18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | | 2 | | 3 | |
| | 4 | ங் | 5 | | |
| | 6 ம | 7 | | | |
| | | | 8 டி | | 9 |
| | 10 அ | | | | |
| 11 பே | | ன் | | | |

**இடமிருந்து வலம்**

1. செய்தித்தாள்.
3. சிறையில் இருப்பவர்.
4. உறுப்பு என்பதன் ஒத்த பதம்.
6. பன்னிரண்டு ராசிகளில் ஒன்று.
8. ஒரு பாரம்பரிய விளையாட்டு (திரும்பியுள்ளது).
10. நெல்லில் இருந்து பெறும் ஒரு உணவுப்பொருள்.
11. பெரிய இன்பம் இப்படிச் சொல்லப்படும்.

**மேலிருந்து கீழ்**

1. பொருள்.
2. வாரத்தில் ஒரு நாள்.
5. ஒரு விலங்கு.
7. திருட்டுக்களில் ஈடுபடுபவன் .
9. அழியாத செல்வம்.
10. சிங்கம்.

முழுப் பெயர் : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

கற்கும் தரம் : ..............................

முகவரி : ..............................

.............................. ..............................

கையொப்பம் திகதி

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 05-02-2003
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 17

இல் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**அபிராமி அன்பழகன்**
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

*2ஆம் பரிசு -*
**கலாரஞ்சினி யோகராசா**
சரசாலை தெற்கு ,
சாவகச்சேரி.

*3ஆம் பரிசு -*
**ஜெயராசா செந்தூரன்**
சிறுகுடில் ,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

★ *பரிசுகள் த்பால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

## வார்த்தை விளையாட்டு - 17 சரியான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. சந்திரன் | 2. திண்ணை |
| 3. அண்ணன் | 4. மாரி |
| 6. கணினி | 5. உலக்கை |
| 7. கரி | 6. கத்தி |
| 8. லத்தி | 7. கடதாசி |
| 11. தாலி | 9. திணை |
| 12. கைகேயி | 10. கலி |
| 13. டசின் | |



# சிறுவர் அரங்கம்

## புத்திசாலி மீனும் ஏமாந்த கொக்கும்





ஒரு சிறிய குளத்தில் நிறைய மீன்கள் வசித்து வந்தன. அவற்றுக்கு அங்கே போதிய உணவு கிடைத்துக் கொண்டிருந்ததால் ஆனந்தமாக வாழ்ந்து வந்தன. அவற்றுக்கு அச்சுறுத்தலாக ஒரு கொக்கு வந்து சேர்ந்தது. மீன்கள் ஓடி ஒளித்தன. ஆனாலும் கொக்கு அவற்றைத் தேடித் தேடிப் பிடித்துக் கொண்டிருந்தது. ஒரு மீன் நீர்மட்டத்துக்கு வந்தபோது அங்கே காத்திருந்த கொக்கு அந்த மீனை லபக்கென்று கௌவிக்கொண்டது.

அந்த மீன் தனது புத்திசாலித்தனத்தைப் பயன் படுத்தி தப்பித்துக் கொள்ளலாமா எனச் சிந்தித்தது. மீனைப் பிடித்துக் கொண்ட கொக்கு அதை கரைக்குக் கொண்டு சென்றது. அப்போது கொக்கைப் பார்த்து மீன் சொன்னது.

"கொக்காரே நான் சாவதற்குப் பயப்படவில்லை. ஆனால் நான் சொல்லும் கதையைக் கேட்டு விட்டு என்னைச் சாப்பிடு" என்று சொன்னது மீன். சரி எப்படி யாவது மீனைச் சாப்பிடத்தானே போகிறேன். ஒரு கதையைக் கேட்டுவிட்டுச் சாப்பிடுவோமே என்று மீனை குளத்தின் கரையில் இறக்கி விட்டது.

மீன் கதை சொல்ல ஆரம்பித்தது. "ஒரு காட்டில் ஒரு நரி வசித்து வந்தது. அது திராட்சைத் தோட்டத்தின் வழியே சென்று கொண்டிருந்தது. அங்கே காய்த்துத் தொங்கிய திராட்சைப் பழங்களைக் கண்ட நரிக்கு அவற்றைப் பறித்துச் சாப்பிட ஆசை வந்தது.

ஆனால், திராட்சைப் பழங்கள் சற்று உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. அதனால் நரி பழத்தைப் பிடுங்குவதற்காக இப்படித் துள்ளிக் குதித்தது" என்று ஒரு முறை துள்ளிக் காண்பித்தது.

மறுபடியும் அப்படியே துள்ளிக் காட்டியது. கொக்கும் கதை கேட்கும் ஆவலில் மீன் துள்ளிப் பாய்ந்து கதை சொல்வதை ரசித்துக் கொண்டிருந்தது. கொக்கு தன் கவனத்தை இழந்திருந்ததை அவதானித்த மீன்,

"இப்போது நரிக்குப் பழம் எட்டவில்லை" என்று கூறி விட்டு "நரி கடைசியாக இப்படித்தான் ஏறிக் குதித்தது" என்று சொல்லிக் கொண்டே அந்தப் புத்திசாலி மீன் குளத்து நீருக்குள் பாய்ந்தது. தண்ணீருக்குள் விழுந்த மீன் ஓடி மறைந்து விட்டது. கதை கேட்டு இரையைப் பறி கொடுத்த கொக்கு ஏமாற்றத்துடன் இன்னொரு மீன் வராதா எனக் குளத்தில் காத்திருக்கத் தொடங்கியது.

## சரியான நேரம் காட்டும் கடிகாரம்



எப்போதும் மிகச் சரியான நேரத்தைக் காட்டும், தவறே செய்யாத **R.C.I** என்ற சூரியக் கடிகாரத்தைத் தயாரித்திருக்கிறது பிளாக் ஃபோரஸ்ட் கம்பனி. இதில் 150,000 ஆண்டுகளில் ஒரு வினாடி அப்படியோ இப்படியோ மாறுதல் இருக்கலாமே தவிர, மற்றப்படி எவ்வித மாற்றமும் இல்லாமல் ஒரே சீராய் இயங்கக்கூடியதாம் இந்தக் கடிகாரம்! பரன்ஸ்விக் என்னுமிடத்தில் உள்ள ஃபிசிகல் - ரெக்னிகல் ஃபெடரல் இன்ஸ்ரிரியூட்டில் அணுசக்தியால் இயங்கும் கடிகாரம் ரேடியோ மூலம் மிகச் சரியான நேரத்தை வெளியிடுகிறது. அந்த அணுசக்தி கடிகாரத்திலிருந்துதான் இந்த **R.C.I** சரியான நேரத்தைப் பெறுகிறது! மிகச்சக்தி வாய்ந்த 58 'சூரியசக்தி மின்கலங்கள்' பொருத்தப்பட்டுள்ள இந்தக் கடிகாரம் ஒரு அணுசக்தி நிலையத்தைப் போலவே வடிவமைப்புச் செய்யப் பட்டுள்ளது.

## கண்டுபிடியுங்கள்



சில புறாக்கள் மரத்தின் மேலேயிருந்தன. சில புறாக்கள் மரத்தின் கீழே இருந்தன. மேலே உள்ள புறாக்கள் கீழே இருந்த புறாக்களைப் பார்த்து, "உங்களிலொருவர் எங்களுடன் வந்து சேர்ந்து விட்டால் நாங்கள் உங்களைப்போல் இரு பங்கு இருப்போம். எங்களிலிருந்து ஒருவர் உங்களுடன் வந்து சேர்ந்துவிட்டால் நீங்களும் நாங்களும் சரிசமமாக இருப்போம்" என்றன அப்படியானால் இருபக்கத்திலும் எத்தனை பறவைகள் இருந்தன?



விடை:-
மேலே 7
கீழே 5
மொத்தம் 12

# தென்னாபிரிக்கா





## (Republic of South Africa)

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை நடத்தப்போகும் நாட்டைப் பற்றி இந்த வாரம் பார்க்கலாம்.

தென்னாபிரிக்கா- ஆபிரிக்காக் கண்டத்தின் தென்முனையில் அமைந்திருக்கின்றது. இந்தியப் பெருங்கடலிலும் இங்கிலாந்தின் பெருங்கடலிலும் கடற்கரைப் பகுதிகளைக் கொண்டிருக்கிறது. இது நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி நிலவுகின்ற நாடு. 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான கொள்கையாக நிறபேதம் இருந்து வந்தது.

மொத்த மக்கள் தொகையில் 74 சதவீதத்தினர் கறுப்பர். 14 சதவீதத்தினர் மட்டுமே வெள்ளையர். 9 சதவீதத்தினர் கலப்பினத்தர். 3 சதவீத ஆசிய இனத்தவர்களும் உள்ளனர். தென்னாபிரிக்காவில் கணிசமானளவு தமிழர்களும் வாழ்கின்றார்கள்.

உலகில் தங்கத்தை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு இதுதான். உலக தங்க உற்பத்தியில் 47 சதவீதத்தைத் தென்னாபிரிக்கா மேற்கொள்கிறது.

| | |
|---|---|
| நிர்வாகத் தலைநகர் - | பிரிட்டோரியா |
| அரசுத் தலைநகர் - | கேப்ரவுண் |
| பரப்பளவு - | 12 லட்சத்து 21 ஆயிரம் ச.கி.மீ. |
| மொழி - | ஆபிரிக்க மொழிகள், ஆங்கிலம் |
| சமயம் - | கிறிஸ்தவம் |
| நாணயம் - | ரொண்ட் |
| முக்கிய நகரங்கள் - | ஜொஹனஸ்பேர்க், பிரிட்டோறியா, கிம்பர்லி, டேர்பன். |
| முக்கிய உற்பத்திகள் - | |
| விவசாயம் - | கோழி, முட்டை, ஆடு, மாடு, கோதுமை, கரும்பு, அப்பிள். |
| கைத்தொழில் - | இயந்திரங்கள், தாதுப்பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், பானங்கள், துணி வகைகள். |
| கனிமங்கள் - | தங்கம், நிலக்கரி, வைரம், செம்பு, இரும்புத்தாது, யுரேனியம், பிளாட்டினம். |

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :............................................
கற்கும் பாடசாலை :............................................
கற்கும் தரம் :............................................
வீட்டு முகவரி :............................................
பிறந்த திகதி :............................................
ஆர்வமுள்ள துறைகள் :............................................
:............................................

............................ திகதி
............................ ஒப்பம்

............................ அதிபர்/ஆசிரியர் ஒப்பம்
............................ பெற்றோர் ஒப்பம்

# உங்கள் கைவண்ணம்

**A.ஜரின் ஜுட்**
தரம்- 07
நெடுந்தீவு மகா வித்தியாலயம்







**செ.சித்தார்த்தன்**
தரம்- 11
கொக்குவில் இந்துக் கல்லூரி

# நாய்க்குட்டி

நன்றியுள்ள பிள்ளை நீதான்
நாய்க்குட்டியாரே
உன்னைப்போல் நன்றி மிக்கவர்
உலகிலில்லையே!



வெள்ளை நிறம் கறுப்பு நிறம்
வேறு பல நிறத்தினிலே
கள்ளர்களைக் கலைக்கவென்றே
நீ பிறந்தாய் உலகிலே!

உண்ணும் போதொரு பிடியுணுவு
நாமுனக்குத் தந்தால் - நீ
என்றும் எங்கள் காலடியில்
நன்றியுடன் அணைந்திருப்பாய்.

நா.காயத்திரி
கொழும்புத்துறை துரையப்பா
வித்தியாலயம்



# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



*முழுப்பெயர்:* சபாநாதன் திவாகர்
*கற்கும் பாடசாலை:*
வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி
*கற்கும் தரம்:* 4
*ஆர்வமுள்ள துறைகள்:*
பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல், விளையாட்டு

*முழுப்பெயர்:* நிரோஜினி கெங்காசுதன்
*கற்கும் பாடசாலை:*
யா/மகாஜனாக் கல்லூரி
*கற்கும் தரம்:* 9
*ஆர்வமுள்ள துறைகள்:*
கலைத்துறை, விளையாட்டுத் துறை, பத்திரிகை வாசித்தல், ரீ.வி பார்த்தல்





*முழுப்பெயர்:* இந்துஜா இலகுமீகரன்
*கற்கும் பாடசாலை:*
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
*கற்கும் தரம்:* 3
*ஆர்வமுள்ள துறைகள்:*
முத்திரை சேகரித்தல், ரீ.வி பார்த்தல், வானொலி கேட்டல்

*முழுப்பெயர்:* யோட்தாஸ் அமல உற்பவராஜ்
*கற்கும் பாடசாலை:*
யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்
*கற்கும் தரம்:* 8
*ஆர்வமுள்ள துறைகள்:*
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்



*முழுப்பெயர்:*
யமுனா சுந்தரலிங்கம்
*கற்கும் பாடசாலை:*
வவுனியா இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்
*கற்கும் தரம்:* 5
*ஆர்வமுள்ள துறைகள்:*
கல்வித்துறை, பத்திரிகை வாசித்தல்

*முழுப்பெயர்* :-
த.வைதேகன்
கற்கும் பாடசாலை:-
யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
கற்கும் தரம்:- 3
ஆர்வமுள்ள துறைகள்:
புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்
கல்வியில் ஆர்வம்.

*முழுப்பெயர்:*
சிவராசா விநோதன்
*கற்கும் பாடசாலை:*
யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி
*கற்கும் தரம்:* 7
*ஆர்வமுள்ள துறைகள்:*
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், சித்திரம்

*முழுப்பெயர்:*
நகுலேஸ்வரன் கௌசிகன்
*கற்கும் பாடசாலை:*
யா/ வேலணை ஐயனார் வித்தியாலயம்
*கற்கும் தரம்:* 4
*ஆர்வமுள்ள துறைகள்:*
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு, சித்திரம் வரைதல்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

புறங்குன்றி கண்டு அனைய ரேனும் அகம் குன்றி
மூக்கின் கரியார் உடைத்து.

- திருக்குறள்

## நமது நோக்கு

### அரிசியில் ஏப்பம்!

**எரியும் வீட்டில் இடுங்கியது அறுதியென - உயிரிழந்து, வீடிழந்து, வாசலிழந்து இனி இழப்பதற்கு எதுவுமில்லை என வாடிநிற்கும் மக்களுக்கான நிவாரண விநியோகத்திலும் மோசடி என்பது தொடர்கதையாகின்றது.**

**ஏற்கனவே - யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற ஊழல், மோசடிகள் - இம்முறை அரிசி அபகரிப்பு வழியாக புதிய கதையாகின்றது.**

**யாழ்.மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்திற்கென இந்தியாவிலிருந்து புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நியமித்த வழங்குநரால் பெறப்பட்ட அரிசி விநியோகத்தில் பெரும் மோசடி நடந்திருப்பது 'நமது ஈழநாடு' வாயிலாக வெளிவந்ததைத் தொடர்ந்து -**

**இந்த மோசடியின் பரிணாமமும், மோசடி நடந்த விதமும் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.**

**இந்தியாவிலிருந்து 2000 மெற்றிக் தொன் அரிசியை ஏற்றியதாகக் கப்பலின் பதிவுகள் சொல்ல - ஒவ்வொரு மூடையிலும் பத்துக் கிலோவுக்கும் அதிகமாகக் களவாடப்பட்டு, 500 மெற்றிக் தொன் அரிசி 'கபளீகரம்' செய்யப்பட்ட உண்மை தற்போது வெளிவந்திருக்கிறது.**

**இந்த மோசடியில் ஈடுபட்டது யார் என்ற சந்தேகம் வலுவாக எழுந்துவரும் நிலையில், இதுபோன்று இன்னும் எத்தனை மோசடிகள் இடம்பெற்றனவோ, இன்னமும் இடம்பெறக் காத்திருக்கின்றனவோ என்ற கேள்விகள் மக்களிடையே அதிகரித்து வருகின்றன.**

**நடைபெற்ற அரிசி மோசடியில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ள போதும் - இதில் மறைந்துள்ள பெரிய கைகளின் செல்வாக்கினூடாக, உண்மைகள் எவ்வளவு தூரம் வெளிவருமென்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.**

**தமிழ் மக்களின் மீதான யுத்தத்திலும், பின்னர் யுத்தத்தின் பாதிப்புகளை நீக்குவதாகக் கூறி மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளிலும் - கையாடப்பட்ட, பைக்குள் விழுந்த நிதியளவு எத்தனை கோடி பெறும் என்ற அங்கலாய்ப்புடன் இந்த 'அரிசி மோசடியும்' இணைந்து விட்டது.**

**சுருட்டியவரை இலாபமென - தமிழ் மக்களை ஏமாற்றியும், ஏய்த்துப் பிழைக்கும் கூட்டங்கள் இனியும் செயற்பட்டால் - நாங்கள் என்னென்ன வழிகளில் எல்லாம் வஞ்சிக்கப்படுவோமோ எனத் தமிழ் மக்கள் ஏங்கிநிற்க -**

**அரிசி மோசடியின் பின்னால் நடந்த இன்னுமொரு சுருட்டல் பற்றியும் மக்களுக்குத் தெரியவந்திருக்கிறது.**

**வடமாகாண அரிசி உற்பத்தியில், குறிப்பாக - கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து அரிசியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும்- அந்த வாய்ப்பு தட்டிக் கழிக்கப்பட்டும்,**

**அதற்குப் பதிலாக தரகுப்பணத்தின் செல்வாக்கால் - பெரும் பண முதலைகளிடம் - யாழ்.குடாநாட்டு நிவாரணத் தேவைக்கான அரிசி விநியோகம் அகப்பட்டிருந்ததும் வெளிப்படையாகி இருக்கிறது.**

**உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்து நியாயமான விலையில் அரிசியைப் பெறுவதன் மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதுடன்,**

**கடந்த காலங்களில் எழுந்த - தரமான அரிசி விநியோகப் பிரச்சினையையும் தவிர்த்திருக்கலாம் என யாழ். அரச செயலகத்தினால் சிபார்சு செய்யப்பட்டும், அந்த சிபார்சு புறந்தள்ளப்பட்டிருப்பது - நியாயமான கோபத்தை மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது.**

**வடமாகாணத்திலுள்ள அரச செயலகங்கள் மூலம் - உற்பத்தியாளர்களிடம் இருந்து அரிசியைப் பெறுவதனால் - மிகச் சுருக்கமான போக்குவரத்து வசதியுள்ள நிலையில், தரை வழியாகவே அரிசியைக் குடாநாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய சூழ்நிலையில் -**

**இந்தியாவிலிருந்து அரிசியைக் கப்பலில் ஏற்றி எடுத்து வருவதன் மூலம் - பொருட்களை கப்பலில் ஏற்றும் கூலி, கப்பற் போக்குவரத்துக்கான செலவு, பருத்தித்துறையில் பொருள் இறக்கக் கூலி, மீண்டும் அரிசியை அரச செயலகக் களஞ்சியங்களுக்குக் கொண்டுவரும் கூலி என- "சுண்டங்காய் கால்பணம் சுமை கூலி முக்கால்பணம்" கதையும் இங்கு நடந்திருக்கிறது.**

**இவ்வளவையும் மீறி அல்லது மறைத்து - அரிசியில் ஆதாயம் தேட முனைந்தவர்களது வேடம் இப்போது களையப்பட்டுள்ள நிலையில் - இனி அடுத்து வரும் நடவடிக்கைகள் நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையாகவும் அமைவது அவசியம் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர், வலியுறுத்துகின்றனர்.**

**தம்மைச் சுரண்டும் நடவடிக்கைகளையும், ஏமாற்றி ஏய்க்கும் செயற்பாடுகளையும் இனிமேலும் அனுமதிக்க மக்கள் தயாராகவில்லை என்பதை - குற்றம் புரிய முனைவோர் குறித்துக்கொள்ள வேண்டும்.**

# வளைகுடாவில் யுத்தம் வெடித்தால் இலங்கையர்களை அரசே அழைக்கும்

## அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அறிவிப்பு!

வளைகுடாவில் யுத்தம் ஆரம்பித்தால், அங்கு தொழில் புரியும் ஆயிரக்கணக்கான இலங்கையர் வேலை இழக்கும் அபாயம் ஏற்படும் என அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தனா தெரிவித்தார்.

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் தொடுக்குமானால் குவைத்தில உள்ள இலங்கையர்களை உடனடியாக நாட்டுக்குத் திருப்பி அழைக்கவேண்டியிருக்கும். குவைத்தில் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் பணியாற்றுவதால் பலத்த நெருக்கடிகள் உருவாகும்.

குவைத் மட்டுமன்றி யுத்த அபாயம் உள்ள நாடுகளில் வேலை பார்க்கும் இலங்கையர்களை நாட்டுக்குத் திரும்பி அழைத்து வரவேண்டியது அரசின் பொறுப்பாகும். இத்தகைய மனிதாபிமானப் பணிகளில் உதவுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை விடப்படும்.

தற்போது வளைகுடாவில் யுத்த அபாயம் உள்ள நாடுகளில் சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் வருடாந்தம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பி வருகின்றனர். இவர்களுக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை எழுமானால், அரசாங்கம் தனது சொந்தச் செலவிலேயே திருப்பி அழைத்துவர நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பெப்ரவரி 14 ஆம் திகதியே பொது நூலகம் திறக்கப்படும்

## மாநகரசபைக் கூட்டத்தில் மேயர் அறிவிப்பு

யாழ்.பொது நூலகம் அடுத்த மாதம் 14 ஆம் திகதியே திறந்து வைக்கப்படும் என, நேற்றுமுன்தினம் நடந்த மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் மேயர் செல்லன் கந்தையன் தெரிவித்தார்.

தற்போது நூலகத்திற்குத் தேவையான ஒரு தொகுதி நூல்கள் மாநகரசபையிடம் உள்ளன. தளபாட வேலைகளில் 80% பூர்த்தியடைந்துள்ளது. நூலகத்தில் பணிபுரிவதற்கான பணியாளர்களின் வெற்றிடங்களை நிரப்ப மாகாணசபையிடம், ஆளணிகளைத் தருமாறு ஏற்கனவே கேட்டிருப்பதாகவும் மேயர் செ.கந்தையன் மேலும் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி நூலகத்தைத் திறந்துவைப்பார் என்றும் மேயர் கந்தையன் தெரிவித்தார்.

(ரா)

## தென்மராட்சியில்

# யுத்த சேத மதிப்பீடுகளை திரட்டும் கிராம அலுவலர்கள்

(மீசாலை)

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்த நடவடிக்கையினால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கும் பணியில் கிராம அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலத்தில் யுத்த நடவடிக்கையினால் தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடுகள், பொதுக் கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் கட்டடங்கள் சேதமடைந்தன.

இவ்வாறு சேதமடைந்த கட்டடங்களின் விபரங்களைச் சேகரிக்குமாறு பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் விடுத்த உத்தரவை அடுத்து கிராம அலுவலர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

(ச,25)

# சங்கானை இலவச சித்த வைத்தியசாலை; பிரதேசசபை மூடியதால் மக்கள் அவதி!

சங்கானையில் நாற்பது வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை இரண்டு வாரங்களுக்கு முன்னர் மூடப்பட்டது.

இவ்வைத்தியசாலைச் சேவைகள், சுழிபுரம் பிரதேச உப அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

இந்த சித்த ஆயுள்வேத வைத்தியசாலை மூடப்பட்டதால், இப்பகுதியிலுள்ள பெருமளவிலான வசதிகுறைந்த மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வலி.மேற்குப் பிரதேசசபையின் உப அலுவலகங்களில் சங்கானை உப அலுவலகமே சோலை வரி மற்றும் வரி அறவீட்டில் அதிக வருவாயைப் பெற்றுக்கொடுத்து வருகின்றது.

இவ்வாறு அதிக வருவாயைப் பெற்றுக் கொடுக்கும் பிரதேசத்தில் இயங்கிய இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையைப் பிரதேசசபை மூடிவிட்டிருப்பது குறித்து இப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

# அரை ஏக்கரில் உப உணவுப் பயிர்களை பயிரிடுவோருக்கு கிணறு அமைக்க மானியம்

(யாழ்ப்பாணம்)

உப உணவு உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்குப் புதிய கிணறுகளை அமைப்பதற்கு அரசு மானியங்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

அரை ஏக்கர் நிலத்தில் உப உணவுப் பயிர் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள், இந்த மானியம் பெறுவதற்குத் தகுதியானவர்கள் எனவும், இவ்வாறானவர்கள் தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக மானியத்திற்காக விண்ணப்பம் செய்யலாம் எனவும் தெரியவருகிறது.

(க,ச)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் 450 வீடுகள் அமைக்கப்படும்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 450 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய கிராமங்களில் இவ்வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

ஜி.ரி.இசற் நிறுவனம் 250 வீடுகளையும், நிகொட் நிறுவனம் 200 வீடுகளையும் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளன.

சென்ற புதன்கிழமை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே இம்முடிவெடுக்கப்பட்டதெனப் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் கூறினார்.

(17)

# நாம் பிரசார ரீதியில் செயற்படுவது; வன்னியில் செயன்முறையிலுள்ளது!

## சர்வதேச கண்ணிவெடி தடுப்பு அமைப்பின் இணைப்பாளர்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் கண்ணிவெடிகளை ஒழிப்பதற்கான பிரசாரத்தினை மேற்கொள்ளும்போது - வன்னியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு, அதனை செயற்படுத்துவது ஆரோக்கியமாகவுள்ளது எனச் சர்வதேச கண்ணிவெடிகளைத் தடைசெய்யக்கோரும் அமைப்பின் மனித உரிமை கண்காணிப்பு ஆய்வு இணைப்பாளர் மேரி வியாகம் தெரிவித்துள்ளார்.

மேரி வியாகமுடன், ஆசிய நாடுகளைச் சேர்ந்த குழு நேற்று வன்னிக்குச் சென்று, கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளைப் பார்வையிட்டதுடன், வெண்புறா நிறுவனத்துக்கும் சென்று பார்வையிட்டது.

அத்துடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குச் சென்று கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் குறித்தும் அக்குழுவினர் அறிந்துகொண்டனர்.

# மும்பாய் குண்டு வெடிப்பில் புலிகளின் உத்தி பயன்பட்டதாம்

## பொலிஸார் சந்தேகம்

மும்பாயிலுள்ள விலேபாலே என்ற இடத்தில் சைக்கிள் குண்டு ஒன்றை வெடிக்கவைத்த முஸ்லிம் பாதுகாப்புப் படைக்குப் புலிகள வெடிகுண்டுப் பயிற்சிகளை வழங்கியிருக்கலாம் என்று மும்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளதாக 'எக்ஸ்பிரஸ் நியூஸ் சேவிஸ்' அறிவித்துள்ளது.

கடந்த வருடம் ஜுலை மாதம் புலிகளிடம் முஸ்லிம் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் வெடிகுண்டு, துப்பாக்கி கையாளல் பயிற்சிகளைப் பெற்றிருக்கலாம் என மும்பாய் பொலிஸார் தெரிவிக்கிறார்கள்.

புலிகளினதும், ஆந்திர - மகாராஷ்டிர பகுதிகளிலுள்ள நக்ஸலைட்டுக்களினதும், தாக்குதல் முறைகளுடன் இந்தத்தாக்குதல் ஒத்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஈராக் மீதான போருக்குப் பிந்திய அரசியல் உலகத்தில் மாறுதல்களை ஏற்படுத்துமா?

கே.ரீ.கணேசலிங்கம்

ஈராக்கின் சர்ச்சை சமரசத்தை கடந்துபோகும் சூழல் விரிவாகவும், தெளிவாகவும் தெரிய ஆரம்பித்துள்ளது. போலியான குற்றச்சாட்டையேனும் காட்டிக்கொண்டு போர் தொடுக்கும் கொள்கை வெற்றியை நோக்கி நகருகின்றது. அதனை விளங்கிக் கொண்ட அரசுகளும் தமக்கான அடுத்தகட்டத் திட்ட வரைபுகளை ஆரம்பித்து விட்டனபோல் சர்வதேச அரசியல் அமைகின்றது.

இஸ்ரேலியத் தேர்தல் மீண்டும் ஏரியல் ஷரோனைப் பிரதமராக்கியுள்ளது. வில்லியம் புஷ் தனது ஆவேசமான பேச்சினை ஈராக்குக்கும், சதாமுக்கும் எதிராக ஆற்றியுள்ளார். ஈரான் அதிபர் இந்தியாவுடன் நெருக்கமான உறவினை வெளிப்படுத்தும் விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். இந்தியா குடியரசு தினத்தை இராணுவ பிரஸ்தாபமாக நடத்தி முடித்தது என்பன கடந்த வார உலக அரசியலில் நிகழ்வுகளாகும்.

மேலும் - ஆசியான் பாதுகாப்பு மகாநாட்டை புதுடில்லியில் ஆரம்பித்து வைத்த இந்திய வெளிவிவகார அமைச்சர், சீனாவுடனான இந்திய நெருக்கத்தினை காட்டியுள்ளதுடன் பாகிஸ்தானை மிரட்டியிருந்தார். எனவே, இவ்வாரம் போருக்குப் பிந்திய உலக அரசியல் எப்படி அமையவுள்ளது என்பதை மதிப்பீடு செய்ய முயலுவோம்.

ஈராக் விடயத்தில் ஏற்படவுள்ள போரைப் பற்றிப்பேசிய பல மேற்குலக ஊடகங்களும் அதன் ஆய்வாளர்களும் தற்போது அதனைக் கைவிட்டுப் போருக்குப் பிந்திய அரசியல் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்த உள்ளதென எதிர்வு கூறுகின்றனர். அவ்வாறு அவர்கள் கூற முயல்வதன் வாயிலாக போர் கொடுமையான விளைவுகளை ஏற்படுத்த உள்ளதென வெளிப்படுத்துகின்றனர்.

ஈராக் தொடர்பான போரில் அமெரிக்கா தலைமை தாங்கியிருப்பதும் ஐக்கிய நாடுகள் சபையை தவிர்த்து போரை அது தொடர்வதற்கும் அமெரிக்க நலன் அதிகளவில் பாதுகாக்கப்பட வாய்ப்புத் தென்படுவதே காரணமாகும். இது அமெரிக்காவுக்கும், அதன் ஆட்சியாளருக்கும் விஷப் பரீட்சையாக அமைந்தாலும் ஆச்சரியப்பட முடியாது என்ற கருத்தும் நிலவுகின்றது.

ஏனெனில் ஈராக், போரில் நிச்சயம் வெற்றிபெறுவது கடினம். அதேபோல் அமெரிக்கா நூறு வீதமும் தோற்றுப் போகுமென்றும் யாரும் கருதமுடியாது. ஆனால், ஈராக் தோற்றாலும் போரை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி வரை தக்க வைக்குமாயினும் சரி அல்லது போரைத் தொடங்கவிடாது தந்திரோபாயத்தை கையாளுமாயினும் அமெரிக்க முதன்மை ஆட்டங் கண்டுவிடும்.

காரணம் அமெரிக்கப் பொருளாதாரம் தளம்பல் நிலையை அடைந்திருக்கின்றது. அதனால் போர் உடனடி வெற்றியை கொடுக்குமாயின் மட்டும் அமெரிக்கா தப்பிப் பிழைக்கும். ஐரோப்பிய நாடுகளும், ரஷ்யா, சீனா, இந்தியாவும் ஈராக் மீதான ஆயுதப் பரிசோதகர்களுக்கு இன்னும் காலத்தை வழங்க முயல்வதற்கும், போரை உடனடியாக ஆரம்பிக்காது தடுப்பதற்கும் உண்மையான காரணம் அதுவேயாகும்.

போர்க்காலம் தாழ்த்தப்படும் ஒவ்வொரு நிமிடமும் அமெரிக்கப் பொருளாதாரத்திற்குப் பின்னடைவாகவே மாறும். அதனால்தான் ஈராக் சர்ச்சையில் தற்போதைய அமெரிக்க ஆட்சியாளரின் ஒரு விஷப் பரீட்சை என்று கருதப்படுகின்றது. அதனால்தான் போரை அமெரிக்கர்கள் உடனடியாக ஆரம்பிக்க முயல்கின்றனர்.

இன்னோர் விடயத்தினையும் அமெரிக்கர்கள் ஈராக் போரில் அடைய விரும்புகின்றனர். அதாவது அமெரிக்கா தலைமையில் போர் என்பதாகும். ஆப்கானிஸ்தான் போன்று ரஷ்யா ஒரு பக்கமும் பிரான்ஸ், ஜேர்மனி கூட்டாகவும் இதர அரசுகள் அமெரிக்கா தலைமையிலும் என்ற போக்கு எதிர்பார்த்த எந்தப் பலனையும் அமெரிக்கர்களுக்கு வழங்கவில்லை.



சதாமுக்கு ஆதரவான பேரணியில் ஈராக்கியப் பெண்கள்

முதலாவது ஈராக் போரில் அனுபவித்த பொருளாதார இலாபத்தினையோ அல்லது அரசியல் சௌகரியத்தினையோ ஆப்கானிஸ்தான் போரில் அடையமுடியவில்லை. அதனால் தற்போதைய போரை அமெரிக்கா தலைமையில் நடாத்துவது அல்லது தனித்து தனது நெருங்கிய நண்பர்களுடன் சேர்ந்து மேற்கொள்வதென முடிவெடுத்துள்ளது.

அதனால்தான் ஐ.நா.விலிருந்து வெளியேறப் போவதாக மிரட்டுவதுடன் தனித்து ஒரு வடிவத்தினை உருவாக்க விரும்புகின்றது. ஏற்கனவே NATO அணியை உருவாக்கி அதனைப் பயன்படுத்தி அதிக பலனை ஏற்படுத்தியதுடன் தற்போது NATO வில் இருக்கும் பல ஐரோப்பிய அரசுகள் - அமெரிக்க எதிர்ப்பை கிழப்பிவிட அதற்கு மாற்றாக பல கிழக்கு ஐரோப்பிய, மத்திய ஆசியக் குடியரசுகளை இணைத்துக் கொண்டு தனது எதிர்ப்பையும் விருப்பத்தினையும் நிறைவேற்ற அமெரிக்கா முயலுகின்றது.

காரணம் பலவீனமான அரசுகள் அமெரிக்காவின் தயவில் இருப்பனவேயன்றி எதிர்ப்பை ஏற்படுத்த உடனடியாக விரும்பாமல் இருப்பதுடன் மட்டுமன்றி, அத்தகைய நடவடிக்கை ஆப்த்தாக முடிந்துவிடும் என எண்ண வாய்ப்புக்களும் உண்டு. அதனால் தற்போதைக்கு நாடுகள் என்ற எண்ணிக்கையில் அமெரிக்கா பலமான ஐரோப்பிய அரசுகளான ஜேர்மனி, பிரான்ஸ் போன்றவற்றை முறியடிக்க திட்டமிடுகின்றது.

ஜேர்மனியும், பிரான்சும் அமெரிககாவை எதிர்ப்பது மட்டும் பெரிய விடயமல்ல. மாறாக ஐரோப்பாவுக்குள் ஏற்பட்டுவரும் கூட்டை உடைப்பதே அமெரிக்காவின் பிரதான நோக்கம். ஈராக் போரைப் பயன்படுத்தி 'யுரோலாந்து' என்ற தேசிய ஒருங்கிணைப்பு மிக்க ஐரோப்பாவை தகர்ப்பதன் மூலம் டொலருக்கு எதிரான யூரோவை முறியடிககலாம் என ஒருவகையான கணிப்பை அமெரிக்கா வகுத்துள்ளது.

தற்போது எட்டு ஐரோப்பிய அரசுகள் ஈராக்கின் போருக்கு அமெரிக்காவுக்கு ஆதரவளிப்பதாக பிரித்தானியா கூறுகின்றது. இது புஷ்க்கும் பிளயருக்கும் பாரிய வெற்றி என்றும் அதில் உட்பட்ட நாடுகள் யூரோ நாணயத்தினை ஏற்றுக் கொண்ட நாடுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*நாளை தொடரும்......*


நமது ஈழநாடு வழங்கும்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: "இரத்தினம்ஸ்"

[இரத்தினகோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

30, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

அசோசியேட்டட் மோட்டார் வெய்ஸ் (AMW) அங்கீகரிக்கப்பட்ட யமஃகா, மோட்டார் சைக்கிள்கள், வெளி இணைப்பு இயந்திரங்களின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்யாட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.

இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்! வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (......................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (......................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (......................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (......................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (......................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை நிரப்பி, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------
வயது: ------------------------
முகவரி: ------------------------

*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003






### றோலண்ட் பிலிப் லெ:.வபர்
(அணித்தலைவர்)

*பிறந்தது* - 7.2.1963, றொட்டர்டாம்
*அணிகள்* - சமர்செட், கிளமோர்கன், கண்டபரி, நெதர்லண்ட்ஸ்.
*சுருக்கமாக*- றோலண்ட் லெவபர் வலுதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.
*சர்வதேச ஒருநாள் அறிமுகம்* - 95/96 எதிர் நியூசிலாந்து
*முதற்தரப் போட்டி அறிமுகம்* - எதிர் OXFORD UNIVERSITY 1990 இங்கிலாந்து.

நிறைய விளையாடியவர், மிகக் காத்திரமான ஒரு நாள் ஆட்டக்காரர், நெட்வெஸ்ட் ஒருநாள் ஆட்டமொன்றில்- 7/15, சமர்செட் அணிக்காக (1990) இன்னொரு ஆட்டத்தில்- 6/53, (90/91) ICC கிண்ணப் போட்டிகளில் - 43 போட்டிகளில் ஒரு சதம், ஒரு அரைச்சதம், பந்துவீச்சில் 71 விக்கெட்டுக்கள், சிறந்த பந்துவீச்சு 5/16.



### தீமொத்தியூஸ் பேர்ணாட்ஸ் மரியா டி லீட்

*பிறந்தது* - 25.01.1968
*அணிகள்* - வூபேர்க் CC, நெதர்லண்ட்ஸ்
*சுருக்கமாக* - ரிம் டி லீட். வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 95/96

சகலதுறை வீரர், அதிரடி வீரர், மத்திய வரிசைத் துடுப்பாட்டவீரர், இவர் 185 ஒரு நாள் போட்டிகளில் ஆடியவர், தேசிய அணியின் நீண்ட கால உறுப்பினர், இங்கிலாந்தின் நோதம்ப்டன் ஷயர், சகெக்ஸ் மற்றும் சர்ரே கவுண்டிகளின் இரண்டாம் நிலை அணிகளுக்கு விளையாடியவர், முன்னாள் தேசிய அணித் தலைவர், ICC கிண்ணப் போட்டி உட்பட 56 முதற்தர அங்கீகரிக்கப்பட்ட ஒருநாள் போட்டிகளில் விளையாடியவர்.



### எட்கார் ஷீவேர்லி

*பிறந்தது* - 17.05.1976
*அணிகள்* - குயிக் ஹாக், நெதர்லண்டஸ்.
*சுருக்கமாக* - எட்கார் ஷீவேர்லி வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 2002/03

இரண்டு ஒருநாள் சர்வதேச ஆட்டங்கள், முதற்தர ஆட்டங்கள் எட்டில் ஆடிய அனுபவம், 95 இற்கு முன் கென்யாவிற்குத் தேசிய அணியுடன் சென்றவர், தொடர்ந்து தன்னை ஓர் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக நிரூபித்து வருபவர்.



### ஜெறோண் ஸ்மிட்ஸ்

*பிறந்தது* - 21.06.1972, டென்ஹாக்
*அணிகள்* - HCC, நெதர்லாண்ட்ஸ்
*சுருக்கமாக* - ஜெரோண் ஸ்மிட்ஸ், வலதுகைத் துடுப்பாட்ட வீரர், விக்கெட் காப்பாளர்.

நீண்டகால விக்கெட் காப்பாளராகவும் கடமை புரிந்தவர், துடுப்பாட்டத் தளர்வுகள் இடையிடையே இவரது பங்கேற்பைத் தடுத்தும், தற்போது நிரந்தர இடமொன்றை அணியில் பிடித்திருப்பவர்.

### லூக்காஸ் பெட்ருஸ் வேன் ட்ரூஸ்ட்



*பிறந்தது* - 28.12.1969, சீடெம்
*அணிகள்* - எக்செல்சியன், நெதர்லண்ட்ஸ்
*சுருக்கமாக* - லூக்வேன் ட்ரூஸ்ட் இடதுகைத் துடுப்பாட்டவீரர் இடதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.
*ஒருநாள் அறிமுகம்*- எதிர் இலங்கை 2002/03, தேசிய அணியின் உபதலைவர், அணியின் முக்கிய பந்து வீச்சாளர், அட்சர சுத்தமாகப் பந்தைத் தாக்குபவர், சர்வதேச ஒரு நாள் போட்டிகள் இரண்டு மட்டும், ICC கிண்ண ஆட்டங்கள் பத்து.



### ஹென்ட்ரிக் ஜன் மொல்

*பிறந்தது* - 29.03.1977
*அணிகள்* - நெதர்லண்ட்ஸ், குயிக்ஹாக்
*சுருக்கமாக* - ஹென்ட்ரிக் ஜன் மொல் இடதுகைத் துடுப்பாட்டவீரர். இடதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 2002/03

மிகக் குறைந்தளவு ஆட்டங்களில் ஆடியுள்ள இவர் வளர்ந்து வரும் ஒரு ஆட்டக்காரர் ஆவார்.

### நிக் ஏ ஸ்டதம்

*பிறந்தது* - 15.03.1975 டாகெக்
*அணிகள்* - ஹோர்மஸ் DVS, நெதர்லண்ட்ஸ்
*சுருக்கமாக* - நிக் ஸ்டதம் வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை OFF BREAK.



நுட்பத்திறன் வகையில் நெதர்லாந்து அணியின் முதற் தர விளையாட்டு வீரராகத் திகழ்பவர், ஆரம்பத் துடுப்பாட்டக்காரராக இருக்க விரும்பும் இவர், எவ்வரிசையிலும் துடுப்பெடுத்தாடத் தயங்காதவர், தனது OFF BREAK பந்துவீச்சை உயர் நிலைப்படுத்த முழுமூச்சாக முயன்று வருபவர்.




### டாண் எல்.எஸ். வேன் பங்க்

*பிறந்தது* - 19.10.1982 (வூபேர்க் )
*சுருக்கமாக* - டாண் வேன் பங்க் வலதுகைத் துடுப்பாட்டவீரர் வலதுகை OFF BREAK
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 2002/03



ஆற்றல் நிறைந்த சகலதுறை இளைஞர், 15,17 வயதிற்குட்பட்ட பிரிவுகளில் இங்கிலாந்துச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டவர், அணியில் மிக இளையவர், ஆரம்பத் துடுப்பாட்டவீரர், நுட்பத்திறன் மிகுந்த இவருக்கு 2003 உலகக் கிண்ணம் நல்ல அனுபவங்களைக் கொடுக்கும், சிறந்த SLIP FIELDER, கடந்த மூன்று மாதங்களாக தென்னாபிரிக்காவில் விளையாடியவர், சர்வதேச ஒரு நாள் ஆட்ட அனுபவம் இரண்டு மட்டுமே.

### றூட் ஜி.நிஜ்மன்

*பிறந்தது* - 15.06.1982
*அணிகள்* - ஹேர்மஸ் DVS
*சுருக்கமாக* - றூட் நிஜ்மன் வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.

இளமையான இவர் டச் கிரிக்கெட் அக்கடமி அணியுடன் 2002/03 இல் தென்னாபிரிக்கா சென்றவர், 2003 உலகக் கிண்ணப் போட்டிகள் இவருக்கு முதற்தடவையாகச் சர்வதேச அனுபவத்தைக் கொடுக்கப் போகின்றது, எதிர்கால நெதர்லாந்து தேசிய அணியில் நிச்சயமான நிரந்தர இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுபவர்.



### பஸ்தியான் ஜியூடெறன்ட்

*பிறந்தது* - 03.03.1977, உட்ரெட்ச்
*அணிகள்* - VOC, VRA, நெதர்லண்ட்ஸ், சசெக்ஸ்
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 95/96.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்,

வளர்ந்து வரும் நட்சத்திரம், 1996 உலகக்கிண்ணஅணியில் அங்கம் வகித்தவர், 1997/98 இல் தென்னாபிரிக்காவில் விளையாடியது முதல், தேசிய அணியில் நிரந்தர அங்கத்தவர், தற்போது இங்கிலாந்து கவுண்டி அணியொன்றில் பங்கேற்கும் ஒரேயொரு தொழில்சார் கிரிக்கெட் வீரர், அண்மித்த பகுதிச் சிறந்த களத்தடுப்பாளர், அணியின் துடுப்பாட்டப் பலத்தை ஒருங்கிணைப்பதில் இவரது துடுப்பாட்டக் காத்திரம் பெரும் பங்கு வகிக்கும்.

### ஜேக்கப் ஜான் எஸ்மியர்

*பிறந்தது* - 28.5.1972, றொட்டர்டாம்
*அணிகள்* - நெதர்லண்ட்ஸ், எக்செல்சியர்.
*சுருக்கமாக* - ஜேக்கப் ஜான் எஸ்மியர். வலதுகைத் துடுப்பாட்டவீரர். இடதுகை ORTHODOX.



மிகவும் கடும் உழைப்பாளி, களத்தில் கலகலப்பானவர், அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவில் பெற்ற அனுபவங்கள் இவரைச் சிறந்த ஒரு பந்து வீச்சாளராகப் பிரகாசிக்கச் செய்யும். நடுவரிசை துடுப்பாட்டவீரர் நல்ல FIELDER. இங்கிலாந்தின் சமர்செட் 2nd XI அணிக்கு ஆடியவர், சர்வதேச ஒருநாள் போட்டிகள் இரண்டில் மட்டும் அனுபவம்.

### கிளாஸ் ஜன் ஜெரோன் வேன் நூட்விஜ்க்



*பிறந்தது* - 10.07.1970, றொட்டர்டாம்
*அணிகள்*- VOC, நெதர்லண்ட்ஸ்
*சுருக்கமாக* - கிளாஸ் ஜன் வன் நூட்விஜ்க். வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மித வேகப்பந்து வீச்சாளர்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 1995/96

நுணுக்கமாகப் பந்தை அவதானித்து விளையாடக் கூடியவர், ஒரு சுவாரஸ்யமான பிரகிருதி, 96 உலகக் கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்துக்கு எதிராக 64 ஓட்டங்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது, தேசிய அணிக்குள் 1994 இல் நுழைந்தவர், ICC கிண்ணம் - 16 போட்டிகள் மற்றும் ஒருநாள் சர்வ்தேசப் போட்டிகள் 5 இல் ஆடியவர்.

### றெனோ ஹான்ஸ் சொல்ட்



*பிறந்தது* - 10.08.1967.
*அணிகள்* - HBS, நெதர்லண்ட்ஸ்.
*சுருக்கமாக* - றெனோ சொல்ட் வலதுகைத் துடுப்பாட்ட வீரர். விக்கெட் காப்பாளர்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 2002/03.

ICC கிண்ணங்கள் முப்பதில் ஆடியவர், உயர்ந்த பட்சமாக 90 ஓட்டங்கள் எடுத்தவர், உள்ளூர் ஆட்டங்களில் நிறையவே பங்கேற்றவர்.



### ஜான் பீக்கோ குளொப்பன் பேர்க்

*பிறந்தது* - 19.06.1974 (ஹார்லெம்)
*அணிகள்* - றூட் அன்ட் விட், நெதர்லண்ட்ஸ்
*சுருக்கமாக* - பீக்கோ குளொப்பன் பேர்க். வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 2002/03

ஆரம்பப் பந்துவீச்சு வீரராவதற்கான ...ர்வம். ஆட்டத்தின் நடுப்பகுதியில் சிறப்பாகப் பந்து வீசுப ...ர். சிறந்த களத்தடுப்பாளர். 1995 இல் நெதர்லாந்து 'A' அணியில் இங்கிலாந்து சென்று அனுபவம் பெற்றவர்.



### அடீல் கே ராஜா

*பிறந்தது* - 15.08.1980 பாகிஸ்தான்.
*அணிகள்* - நெதர்லண்ட்ஸ் URA
*சுருக்கமாக*- அடீல் ராஜா வலதுகைத் துடுப்பாட்டவீரர் வலதுகை OFF BREAK
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 2002/03

சகலதுறை ஆட்டக்காரரான இவர், 17 வயதிற்குட்பட்ட அணியுடன் 1997 இல் இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டவர், இவர் ஒரு சிறந்த OFF SPINNER ஆக உருவாகி வருபவர், நெதர்லாந்துக்காக ஆரம்பத் துடுப்பாட்ட வீரனாகவும் இருந்துள்ளார், சிறந்த களத்தடுப்பாளர்.

## இது எப்படி இருக்கு?

கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் இலங்கை அணிவீரர்கள் கோடிஸ்வரர்களாகவும் இலட்சாதிபதிகளாகவும் இருக்க, கனடிய வீரர்கள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை நம்பமுடிகிறதா? உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளும் அணி வீரர்கள் பெறப்போவது 2,000 கனடிய டொலர்கள் மட்டுமே. மற்றும் போட்டித் தொடர்வரை நாளுக்கு 40 டொலர், போட்டி தொடங்கிய பின் 75 கனடிய டொலர். அணியின் தலைவர் ஹரிஸ் கூடுதலாகத் தேவைப்படும் பணத்தை ஈடுவைத்தே பெற்றுள்ளார். பணத்திற்கப்பால் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடுவது அற்புதமானது என்கிறார். மூவர் தவிர மற்றவர்கள் எல்லோரும் மாணவர்களும் சிறுசிறு வேலை செய்பவர்களுந்தான். கனடிய கிரிக்கெட் சபை அனுசரணையாளர்களைத் தேடிப் பெறுவதில் அக்கறை காட்டுவதில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார்கள் ஆர்வலர்கள் சிலர். முதல் சுற்றுக்கு அப்பால் கனடா நிச்சயம் போகப் போவதில்லை என்பதால், தோல்விக்கு 5,000 டொலர் என்றவகையில் அணி 30,000 டொலர் பெற்றுக்கொள்ளும் அவ்வளவுதான். ஒரு ஓப்பீட்டுக்குப் பார்த்தால் இலங்கை அணிவீரர் ஒருவர் ஆகக்குறைந்தது பெறப் போகும் பணம் 150,000 டொலர்கள். கனடிய கிரிக்கெட்துறை வளரமுடியுமா? சந்தேகந்தான்.

## நாளும் ஒரு வினா

**1975 உலகக் கிண்ணப் போட்டிகளின் முதலாவது ஆட்டத்தில் சுனில் கவாஸ்கர் 36 ஓட்டங்கள் பெற்றதன் முக்கியத்துவம் என்ன?**

**ஆரம்பத் துடுப்பாட்டக்காரராகச் சென்று 60 ஓவர்களும் நின்று துடுப்பாடி ஆட்டமிழக்காது திரும்பிய அவர் பெற்ற ஓட்டங்கள் 36.**

(INFAMOUS INNINGS)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமைச்சர் ஜயலத் விஜயம் திட்டமிட்டபடி நடக்கவில்லை

## கறுப்புக்கொடி காட்ட தயாராயிருந்த மக்கள்

(யாழ்ப்பாணம்)

கீரிமலையில் அமைக்கப்பட்ட நன்னீர் விநியோகத் திட்டத்தினை புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயரட்ணம் ஆரம்பித்து வைத்தார்.

நேற்று புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா யாழ்ப்பாணம் வருகை தந்து மேற்படி கீரிமலையில் அமைக்கப்பட்ட நன்னீர் விநியோகத் திட்டத்தினை ஆரம்பித்து வைப்பார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், இறுதி நேரத்தில் அமைச்சரின் யாழ்.விஜயம் தடைப்பட்டது.

இதேவேளை - உயர்பாதுகாப்பு வலயத்திற்கும், மக்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணாமல் அமைச்சர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ யாழ். வரக்கூடாது என எதிர்ப்புத் தெரிவித்து - கறுப்புப் பட்டிகளை அணிந்தவண்ணம், யாழ். கச்சேரியடியில் எதிர்ப்புத் தெரிவிப்பதற்குத் தயாராக மக்கள் காத்திருந்தனர். எனினும், அமைச்சர் வராததால் அவர்கள் கலைந்து சென்றனர்.

அமைச்சர் விஜயம் ரத்தானதால், யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகைதந்த புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயரட்ணம் மற்றும் மேலதிக செயலாளர் குமாரதாசன் ஆகியோர் நேற்றுக் காலை 9 மணியளவில் கீரிமலை சென்று அங்கு நன்னீர் விநியோகத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்த இவர்கள், புனரமைக்கபட்ட பொதுசன நூலகத்தையும் பார்வையிட்டதுடன், யாழ். முதல்வர் செல்லன் கந்தையன் மற்றும் யாழ். மாநகர ஆணையாளர் இராமலிங்கம் ஆகியோருடனும் கலந்துரையாடினார்கள். இதன்போது, புனரமைப்பு வேலைகளை துரிதமாக நிறைவேற்றும்படியும் உங்கள் எண்ணத்தின்படி பொதுசன நூலகத்தின் திறப்பு விழாவை நடாத்தும்படியும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயரட்ணம் தெரிவித்தார்.

(லி)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

மல்லாகம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் நாகேந்திரசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## தென்பகுதிக்கான மாணவர் பயணம் பிற்போடப்பட்டது

தென்பகுதிக்கான மாணவர்களின்பயணம் முன் திட்டமிட்டபடி இன்று நடைபெறமாட்டாதென, யாழ். கல்வி வலயத்தில் நடைபெற்ற அதிபர்களுக்கான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

5 ஆம் திகதி அல்லது 7 ஆம் திகதி தென்பகுதிக்கான மாணவர் பயணம் நடைபெற, உரியவர்களுடன் தொடர்புகொண்டு பயண ஒழுங்குகளை மேற்கொள்ளுவதெனவும் அப்போது முடிவு செய்யப்பட்டது.

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

### பாரிய...

தெரிவித்ததாவது,

புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சின் செயற்பாடுகளுக்காக, இவ்வாண்டுக்கென 225 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மேலதிகமாக நஷ்டஈடு வழங்குவதற்கென 52 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியினை நாம் வட-கிழக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளித்து, புனர்வாழ்வு மற்றும் நிவாரணப்பணிகளை மேற்கொள்ளவுள்ளோம். இதன்படி யாழ்.மாவட்டத்திற்கு 70 மில்லியன் ரூபா எமது அமைச்சினூடாக ஒதுக்கப்படவுள்ளது. எதிர்காலத்தில் புனர்வாழ்வு அமைச்சினூடாக மேற்கொள்ளவுள்ள செயற்திட்டங்கள் யாழ்ப்பாண மக்களின் கருத்தின்படியே மேற்கொள்ளப்படும் எனவும்,

எதிர்காலத்தில் புனர்வாழ்வு அமைச்சு எந்தவித பாரிய புனரமைப்பு வேலைகளிலும் ஈடுபடமாட்டாது. இவற்றை எதிர்காலத்தில் சிறானே மேற்கொள்ளும். புனர்வாழ்வு அமைச்சு நிவாரண, நஷ்டஈட்டுப் பணிகளிலே ஈடுபடவுள்ளது எனவும் அமைச்சின் செயலாளர் ஜெயரட்ணம் தெரிவித்தார்.

பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி, வட-கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர் ரங்கராஜா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இதன்போது கலந்துகொண்ட பல திணைக்கள, கூட்டுறவுத் தலைவர்கள் தமது கருத்துக்களையும் தெரிவித்ததுடன், இவர்கள் பெரும்பாலும் புனர்வாழ்வு அமைச்சின் கடந்தகால நடவடிக்கைகளை விமர்சித்து தமது கருத்துக்களைத் தெரிவித்ததுடன் புனர்வாழ்வு அமைச்சின் மீதுள்ள அதிருப்தியையும் வெளிக்காட்டினார்கள்.

இக்கலந்துரையாடலில் யாழ். முதல்வர் செல்லன் கந்தையன், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சதுர்முகம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், யாழ்.பிரதேச செயலர் செந்தில்நாதன் ஆகியோரும் மேலும் பல திணைக்கள, கூட்டுறவுத் தலைவர்களும் பங்குபற்றினர். (லி)

## மீளக்குடியமர்வோருக்கு 2 லட்சம் வீடுகள் அமைப்பு

வட-கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீளக்கட்டி எழுப்பும் குறிக்கோளுடன், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்தப்படவுள்ள திட்டத்தின் கீழ், 2 லட்சம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு அகதிகள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு 75 ஆயிரம் ரூபா வீட்டு நிர்மாணத்துக்காகவும், 25 ஆயிரம் ரூபா ஏனைய உதவிகளுக்காகவும் வழங்கப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகர் நாராயணசாமி மட்டக்களப்புக்கு விஜயம் செய்து மீளக்குடியமரும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்தபோதே இது தெரிவிக்கப்பட்டது.

### திருட்டு...

மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து - விடுதலைப் புலிகள் இது பற்றிப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்குத் தெரியப்படுத்தினர்.

இதேவேளை - நேற்று இரு இராணுவத்தினர் மக்களால் பிடிக்கப்பட்டதையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற படையினர் இரு இராணுவத்தினரையும் மீட்டதுடன் 30 இற்கு மேற்பட்ட மக்களையும் விசாரணைக்காக அழைத்துச் சென்று, பின்னர் விடுவித்தனர். (ச)

### எதிர்க்கட்சி...

அண்மையில் யாழ்ப்பாணம் சென்று வந்ததன் பின்னரே, மகிந்த ராஜபக்ஷவுக்கான திடீர் அழைப்பு இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைத்ததாகவும் - மூன்று தினங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நிருபம் சென் மகிந்த ராஜபக்ஷவை நேரடியாகச் சந்தித்தபோதே, இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

# பொதுத் தேர்தலுக்கு முன்னோடியாக தென் மாகாண சபைக்குத் தேர்தல்!

## ஜனாதிபதி சந்திரிகா ஆராய்கிறார்

பொதுத் தேர்தலுக்கு முன்னோடியாகத் தென்மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது.

தென்மாகாண சபையைக் கலைத்து, பரீட்சார்த்தமாகத் தேர்தலை நடத்தவே ஜனாதிபதி திட்டமிடுவதாகக் கூறப்படுகிறது. இந்தத் தேர்தலில் வெற்றி கிடைத்தால் பொதுத் தேர்தலை நடத்துவதெனவும், அவர் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் கட்சியின் உயர் மட்டத் தலைவர்கள் பங்குபற்றும் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றன.

இந்தத் தேர்தலில் - விலைவாசி உயர்வு, சமாதானப் பேச்சுக்களை எதிர்ப்பது போன்ற விடயங்களை முன்னிறுத்திப் பிரசாரம் செய்யவும் திட்டமிடப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரையில், இந்தத் தேர்தல் வாழ்வா சாவா என்ற நிலையை ஏற்படுத்தியிருப்பதாகவும், தேர்தலில் வெற்றி பெற்றால்தான், பொதுத்தேர்தல் நடத்த சந்திரிகா தீர்மானிப்பார் எனவும் அவதானிகளால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இன்று

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப் புக்குழக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

குடாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

# எதிரெதிரே வந்த பஸ்கள் கச்சேரியடியில் மோதின!

## பஸ் சாரதி காயமடைந்தார்

எதிர் எதிரே வந்து கொண்டிருந்த இரண்டு பஸ் வண்டிகள் மோதிக் கொண்டதில் பஸ் சாரதி ஒருவர் காயமடைந்தார். மற்றும் பயணி ஒருவர் அதிர்ச்சியால் மயக்கமடைந்தார். இவர்கள் இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொணடு செல்லப்பட்டனர்.

புங்கன்குளம் சந்திக்கும் யாழ். கச்சேரிக்கும் இடையில் கண்டி வீதிப் பகுதியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற மேற்படி விபத்தில், கண்ணாடிச் சிதறல்களால் காயமடைந்த பஸ் சாரதி [illegible]த்துரை நாகராசா, அதிர்ச்சி காரணமாக மயக்கமடைந்த தயாளினி ஆகிய இருவருமே யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களாவர்.

(55)

# வேகமாக இலக்கு நோக்கி நகருகிறது சமாதானப் பேச்சு!

## பிரதமர் ரணில் நாடாளுமன்றில் திருப்தி

(கொழும்பு)

இலங்கையின் சமாதானப் பேச்சு வார்த்தைகள் உச்ச நிலையை எட்டியிருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோ பேச்சுக்கள் தொடர்பாக நாடாளுமன்ற விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் பேசும் போது-

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது, அதிமுக்கியமான விடயங்கள் ஆராயப்படும் என்றும் கூறினார்.

சமாதானப் பேச்சு வார்த்தைகள், சமாதான முன்னெடுப்பு வெகுவேகமாக அதன் இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து, பொதுமக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவிருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு சமாதானப் பேச்சு வார்த்தைகளிலும் எட்டப்படும் தீர்மானங்களை நாட்டு மக்களே அங்கீகரிப்பர் என்றும் ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார்.

உயர்பாதுகாப்பு வலயம் பற்றிய இந்திய ராணுவ அதிகாரியின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும், அதன் பிரதிகள் ஜனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பிவைக்கப்படும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் தெரிவித்தார்.

### எமது...

சிறுவர்களின் நலன்களும், மேம்பாடுகள் சம்பந்தமாக முக்கியமாகப் பங்கெடுத்து வருகின்ற சர்வதேச அமைப்பான யுனிசெப்பின் தலைவி வருகை தந்திருப்பதானது, ஒரு ஆரோக்கியமான விடயம் என்றும் கூறினார்.

யுனிசெப்பின் தலைவி இங்குள்ள களநிலைமை, யதார்த்தபூர்வமான நிலைமைகளை சரியாகப் பார்த்து விளங்கிக்கொண்டு எங்களுடன் உரையாடியுள்ளது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

முக்கியமாக, திரிபுபடுத்தப்படும் விஷமப் பிரசாரங்களை அவருக்கு விளக்கியிருக்கிறோம். உண்மையில் போரின் விளைவுகளால் கடந்த இரு பதாண்டு காலத்தில் எங்களுடைய சிறுவர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு விரைவில் துரிதமான புனர்வாழ்வுத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக யுனிசெப்புடன் இணைந்து செயற்படவுள்ளோம் என்றும் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

போரின்போது ஏற்பட்ட குண்டு வீச்சுக்களினால் எமது சிறுவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். இதனை மூடி மறைப்பதற்கே தென்னிலங்கையில் சிறுவர்களைக் கடத்துவதாக விஷமப் பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்று யுனிசெப் அதிகாரிக்கு விளக்கிக் கூறியுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி அரசியற்துறை நடுவப் பணியகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. புலிகள் தரப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன், சோ.தங்கன், தியாகராசா, சமாதானச் செயலக உதவிச் செயலர் செல்வி ஆகியோரும் பங்குபற்றினர்.

ஐ.நா. சிறுவர் நிதியத்திலிருந்து பணிப்பாளர் கரோல் பெலாமி, யுனிசெப் நிறுவன அதிகாரி ரெற் சைபன் மற்றும் மல்லாவி வதிவிடப் பிரதிநிதி பெனிகுறோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சர்வதேச...

பி.பி.ஸியின் தென்னாசிய சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அப்போது அவர் மேலும் தெரிவிக்கும்போது, அந்தக் காலங்களில் நடந்ததைப் பற்றி இப்போது ஆராய்ந்து கொண்டிருக்க முடியாது. இனிவரும் காலங்களில் நடப்பனவற்றையே நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

தமது இயக்கத்தில் சிறார்களை சேர்த்துக் கொள்வதில்லை என்ற சர்வதேச இணக்கத்துக்கமைய செயற்படுவதாக விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் நலன்பேணும் திட்டங் களில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட நாம் விரும்புகிறோம் என்றும் பெலாமி அப்போது மேலும் தெரிவித்தார்.

### போரால்...

கடந்தகால இராணுவ நடவடிக்கையின்போது பெற்றோர்களையும், உறவினர்களையும், இழந்த பல சிறுவர்கள் எமது செயலகங்களில் தற்பொழுதும் உள்ளனர். இவ்வா[illegible] சிறுவர்களுக்கு கல்வியும் தொழில் முயற்சியும் வழங்குவதன் மூலம் சமூக நீரோட்டத்திற்குக் கொண்டு வரமுடியும். இதற்காகவே இந்தத் தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்கும் திட்டத்தை முன் வைத்துள்ளோம்.

இவ்வாறான சிறுவர்களைப் பாடசாலைகளில் உள்வாங்குவதற்கேற்ப இங்கு பாடசாலைகள் செயற்படவில்லை. தளபாடங்கள் இல்லை, கட்டட வசதிகள் இல்லை, ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. இவ்வாறான பிரச்சினைகளை சர்வதேச சமூகம் கவனத்திற்கொள்ள வேண்டும் என்று விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.37 | 96.79 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.02 | 155.34 |
| 1 யூரோ | 101.28 | 102.43 |
| 1 சுவிஸ் பிராங் | 69.17 | 70.74 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.03 | 57.00 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.80 | 25.80 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.